# சுதந்திரன்

SUTANTIRAN

விலை: சதம் 60. தொலைபேசி: 23411 நிறுவியது: 1947

வள்ளுவர் ஆண்டு 2006 புரட்டாதி 26, ஷவ்வர 6 (12-10-75) ஞாயிறு புத்தகம் 29 இதழ் 11


## சிறைச்சாலையிலும் தமிழனுக்கு வேலை இல்லை!

இந்நாட்டில் சிறைச்சாலைகள் தமிழர்களை அடைத்துவைக்கத்தான் இருக்கின்றனவே தவிர—தமிழர்களுக்கு இனி அவற்றில் வேறு வேலை ஏதும் கிடையாதென்ற நிலை தோன்றிவருகிறது. இன்னும் கொஞ்ச நாள் போனுல் சிறைச்சாலை ஊழியராக ஒருதமிழன் கூட அகப்படமாட்டான்! அண்மையில் சிறைக் காவலர் பதவிகளுக்கு (JAILOR) 34 பேர் தெரிவு செய்யப்பட்டார்களாம். இந்த 34 பேரில் ஒருவர் கூட தமிழர் இல்லை! ஐயோ சோசலிசமே!

### ● மொழிவாரித் தரப்படுத்தல் மேலும் தொடரும்!

# சிங்கள வெறியர் கோரிக்கைக்கு அரசுபணிந்தது

## பீட்டர் கெனமனுக்கு பட்டைநாமம்!

இலங்கைப் பல்கலைக் கழகத்துக்கு மாணவர்களை அனுமதிப்பதில் இதுநாள்வரை அரசு கடைப்பிடித்துவரும் மொழிவாரித் தரப்படுத்தல் முறையை கைவிடக்கூடாதென்றும்—அப்படிக் கைவிட்டால் பாரதூரமான விளைவுகளை சந்திக்க வேண்டிவரும் என்றும் சிங்கள இன வெறியர்கள் விடுத்த பயமுறுத்தலுக்கு அரசு பணிநதுவிட்டது. இப்போதைய மொழிவாரித் தரப்படுத்தல் முறையையே பல்கலைக் கழக அனுமதி விடயத்தில் தொடர்ந்தும் அமுல்படுத்துவதென்று அது தீர்மானித்துள்ளது.

—(ஆதாரம் டெய்லி நியூஸ் 9-10-75)

மொழிவாரித் தரப்படுத்தல் முறையை நீக்கவேண்டும் என்று கெனமன் குழு செய்துள்ள சிபார்சையும் அரசு நிராகரித்துவிட்டது! இதன் காரணமாக தமிழ் மாணவர்கள் தொடர்ந்தும் ஒதுக்கப்படும் நிலையே நீடிக்கப்போகிறது.

1970ம் ஆண்டுமுதல் ஐக்கிய முன்னணி அரசு பின்பற்றிவரும் மொழிவாரித்தரப்படுத்தல் கொள்கையால் தமிழ் மாணவர்கள் கடந்த ஐந்தாண்டுகளாக திறமையிருந்தும் பல்கலைக்கழக அனுமதிபெற முடியாமல் ஒதுக்கப்பட்டுவருவதும், இதை எதிர்த்து தமிழ் மாணவர்களும், தமிழ் மாணவர் பேரவை, தமிழ் இளைஞர் பேரவை, தமிழர் கூட்டணி போன்ற அரசியல் இயக்கங்களும், தமிழ்க் கல்விமான்களும்

—5-ம் பக்கம் பார்க்க

# அடக்குமுறையை எதிர்த்து தமிழ் மாணவர்கள் போர்க்கோலம்!

தமிழ் ஈழத்தில் பொலிசார் மேற்கொண்டிருக்கும் அடக்குமுறை நடவடிக்கைகளையும் தமிழ் மாணவர்களையும் இளைஞர்களையும் காரணமின்றி கண்டகண்டபடி பொலிசார் கைதுசெய்வதையும் சித்திரவதைசெய்வதையும் எதிர்த்து—அவசரகாலச் சட்டவிதிகளையும் மீறி ஊர்வலம் நடத்தியும் பாடசாலைகளைப் பகிஷ்கரித்தும் மாணவர்கள் தங்கள்எதிர்ப்புக் குரலை அரசுக்கு எடுத்துணர்த்திவருகின்றனர். தமிழ் மாணவ, மாணவியரிடையே மூண்டெழுந்துள்ள இந்த வீர உணர்ச்சியும் துணிவும் தமிழ் மக்களிடையே பெருமிதத்தை ஏற்படுத்தியுள்ளது.

அண்மையில் ராஜ்குமார் என்ற மாணவனை கைதுசெய்ததை எதிர்த்து சுழிபுரம் விக்டோரியா கல்லூரி மாணவ மாணவியர் (மாணவியர் சுமார் 75 பேர் உட்பட) பொலிசாருக்கு அஞ்சாமல், அவசர காலச் சட்டத்தையும் மீறி ஊர்வலம் நடத்தி, யாழ். கல்வி அதிகாரியிடமும் யாழ். பொலீஸ் மா அதிபரிடமும் மனுக் கொடுத்தனர். மாணவ மாணவிகளின் எழுச்சி கண்ட பொலிசார் பின்னர் ராஜ்குமாரை விடுதலை செய்தனர். (முழு விபரம் உள்ளே.)

இதேபோல உரும்பராய் மாணவர்களும் புதிய சரித்திரம் படைத்தனர்.

தமிழ் இளைஞர்களை கைது செய்து சிறையிலடைத்ததையும் தமிழ் மக்கள் மீது நடைபெற்றுவரும் பொலீஸ் அடக்கு முறையையும் கண்டித்து தியாகி சிவகுமாரன் பிறந்த ஊரான உரும்பராயை சேர்ந்த மாணவ மாணவிகள் யாருடைய வேண்டுகோளுமின்றித் தாமாகவே முன்வந்து ஒரு நாள் பாடசாலைப் பகிஷ்கரிப்பை நடத்தி தங்கள் எதிர்ப்பை எடுத்துக்காட்டினர்.

உரும்பராய் இந்துக் கல்லூரியைச்சேர்ந்த மாணவர்கள், பழைய மாணவர்களை கைதுசெய்ததை எதிர்த்தும், பொலிஸ் அடக்குமுறையைக் கண்டித்தும் 29-9-75ல் நடைபெற்ற இப்பாடசாலைப் பகிஷ்கரிப்

(5-ம் பக்கம் பார்க்க)

# தமிழன் நிலத்தைப் பறித்து அதில் புத்தர் சிலை பிரதிஷ்டை!

திருகோணமலை மாவட்டத்தில் நொச்சிக் குளமாகவிருந்து 'நொச்சியாகம'வாக மாற்றப்பட்டுவரும் தமிழ்க் கிராமத்தில் தமிழன் ஒருவனிடமிருந்த நிலம் பலவந்தமாகப் பிடுங்கப்பட்டு, அவ்விடத்தில் புத்தர் சிலை பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளதாம்.

இதுபற்றிக்கூறப்படுவதாவது:-

"நொச்சியாகம" நகரமாக வளரும் ஒரு கிராமம். இதன் கடைவீதியில் அரை ஏக்கருக்குமேலதிகமான நிலப்பரப்பு கனகசபை என்னும் தமிழரொருவர்க்கு சொந்தமாகவிருந்தது. அதைத் துப்பரவாக்கி முட்கம்பியடித்து விற்பதற்கு தயாராக வைத்திருந்தார்.

இரு மாதங்களின் முன் ஒரு நாளிரவு திடீரென கம்பிகள் கழற்றி வீசப்பட்டன. இந்தக் கிராமத்திற்கு வந்தேறு குடிகளான சிங்களவர் கூட்டமொன்று, சு. க. வின் எல்லாமே தானுகத் தன்னையாக்கிக் கொண்டுள்ள இந்தப் பிராந்தியத்தின் முடிசூடா மன்னனெருவரும்; யூ. என். பி. டமாரம் ஒன்றும் தலைமை தாங்க, இந்தத் தமிழன் நிலத்தில் புத்தர் சிலையைப் பிரதிஷ்டை செய்தது.

இந்தநாட்டின் பொலிசிலிருந்து தன்னைக் காப்பாற்ற வேண்டிய தமிழன், கொள்ளையடிப்பவன் சிங்களவனுகும் போது பொலிஸ் தனக்கு உதவும் என எண்ணுவதே பேதமை.

எந்த வித அரசியல் குழப்பங்களுமில்லாது இந்த நாட்டின் நீதியும் சட்டங்களும் நீதிமன்றங்களும் ஒழுங்காகச்செயற்படுவதாக நம்பும் நாளில் ஒரு தமிழனின் உடைமை இவ்வாறு பட்டப்பகலில் பலாத்காரமாகப் பறிக்கப்பட்டது.

27-9-75ந் திகதி சனிக்கிழமை நண்பகல் மாண்பு மிகு அமைச்சர் திரு. கே. பி. இரத்திஞயக்க, தமிழ்ப் பிரதேசத்தின் கல்வியும் தமிழர்களின் நட்பும் நிறைந்த பெருமகன், தமிழனிடம் பறித்தெடுத்த நிலத்தில் ஒரு பயணிகள் விடுதி—"விஸ்ராம ஸலாவ" (Buddhist Pilgrims Centre) விழாவை ஆரம்பித்து வைத்ததும் இங்கு குறிப்பிடத்தக்கது.

## துரையப்பா கொலை: சம்பவம் நடந்த இடத்து சாட்சிகள் ஒருவரையே அடையாளம் காட்டினர்!

திரு. அல்பிறட் துரையப்பா கொலை தொடர்பாக கடந்த திங்களன்று (6-10-75) மல்லாகம் மாவட்ட நீதிபதி முன்னிலையில் நடைபெற்ற அடையாள அணி வகுப்பின்போது ஒரு சந்தேக நபர் மட்டுமே சம்பவம் நடைபெற்ற இடத்தில்இருந்தவர்களால் அடையாளம் காட்டப் பட்டதாக சந்தேக நபர்கள் சார்பில் நீதி மன்றத்தில் ஆஜரான சட்டத்

—5ம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் உரிமைக் குரல்



க. இராமநாதன்,
கொழும்பு-6.

கே: இலங்கை — இந்திய இணைப்பு இயக்கம் பற்றி உங்கள் கருத்தென்ன?

ப: இலங்கையிலும் தமிழன் அடிமை; இந்தியாவிலும் தமிழன் பூரண சுதந்திரத்துடன் இல்லை; இங்கு தமிழ் ஈழம் சிங்கள ஏகாதிபத்தியத்திடம் அடிமைப் பட்டுக் கிடக்கிறது; இந்தியாவிலோ தமிழ் நாடு சுதந்திர நாடாக இல்லை; இந்நிலையில் இந்திய — இலங்கை இணைப்பு என்பது அர்த்தமற்றது; பைத்தியக்காரத்தனமானது. தமிழ் ஈழமும் தமிழ் நாடும் முதலில் முழு விடுதலை பெறவேண்டும். அதன் பின் வேண்டுமானால் அகண்ட தமிழகம் ஒன்றை உருவாக்கலாம்.

*

கோபால் கிருஷ்ண,
முதலைக்குடா.

கே: வாய்ப்பேச்சால் மக்களை மயக்கும் சிங்கள அரசியல்வாதிக்கு என்ன கூறலாம்?

ப: சிலரைப் பலகாலம் ஏமாற்றலாம்; பலரைச்சில காலம் ஏமாற்றலாம்; ஆனால் எல்லோரையும் எக்காலமும் ஏமாற்ற முடியாது! இது சிங்கள அரசியல்வாதிக்கு மட்டுமல்ல — எந்த ஒரு அரசியல்வாதிக்கும் பொருந்தும்!

*

புனிதம்,
புன்னாலைக்கட்டுவன்.

கே: எதிர்க்கட்சிகள் நசுக்கப்படுவது எதைக்காட்டுகிறது!

ப: ஜனநாயகம் செத்துவிட்டதை!

கே: அரசாங்கம் தமிழர் கூட்டணித் தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு தயங்குவதேன்?

ப: ஆதிக்கத் திமிர்தான் காரணம்!

*

எஸ். அப்துல் காதர்.
மீருவோடை
வாழைச்சேனை

கே: தனியொருவனுக்கு உணவு இல்லையெனில் ஜெகத்தினை அழித்திடுவோம் என்று கூறினார் பாரதியார். ஆனால் இன்று...?

ப: உணவில்லாமல் மலையகத்தில் ஏழைத் தொழிலாளர்களான தமிழர் பலர் பட்டினியால் செத்துக் கொண்டிருக்கிறார்கள்!

*

எஸ். வி. பாமினி
ஊரிக்காடு
வல்வெட்டித்துறை

கே: நான் ஒருவரைக் காதலித்தேன். அவர் என்னைத் திருமணம் செய்ய ரூபா 50,000 கேட்கிறார் என் ஏழைப்பெற்றோரிடமோ அவ்வளவு பணமில்லை. இதை அவரிடம் கூறினால், அவரோ தான் வேறோர் 'நர்சை' காதலிப்பதாக கூறுகிறார். இதற்கு என்ன செய்ய? ஒருவழி கூறுங்கள்!

ப: அவர் உங்களைக் காதலிக்கவில்லை; ஐம்பதினாயிரம் ரூபாவைத்தான் காதலித்தார என்பது இப்போது புரிகிறதல்லவா? அந்தப் பட்டாம் பூச்சியை மறந்துவிட்டு, பெற்றோர் பார்த்து செய்துவைக்கும் மாப்பிள்ளையுடன் மகிழ்ச்சியுடன் இல்லறம் நடத்துங்கள்!

*

கா.,பிறேமன்,
அளவெட்டி

கே: சாதியொழிப்பை தமிழர் கூட்டணிவிரும்புமா?

ப: விரும்புமாவா? சாதியும் தீண்டாமையும் ஒழிக்கப்படுவதற்கு அரசியலமைப்பிலேயே சட்டவிதிகள் ஆக்கப்படவேண்டுமென்றுவாதாடிய இயக்கம்; அதையே தனது கோட்பாடாகக்கொண்ட இயக்கம் —தமிழர் கூட்டணி ஒன்றுதானே!

*

சி. மனோகேரன்,
குச்சவெளி.

கே: இன்றைய தமிழரின் நிலைமை என்ன? தங்கள் கருத்து யாது?

ப: பெருந்தன்மையால் கெட்ட பேயர்கள் இன்றைய தமிழர்கள்!

*

கு. மு. றபீக்கா,
குச்சவெளி.

கே: எம்மைவாட்டி வதைத்துக்கொண்டிருக்கும் இன்றைய அரசைப் பற்றி தாங்கள் என்ன கூறுகிறீர்கள்?

ப: தமிழ் மக்களைத் தூங்கவைத்து நஞ்சூட்டாமல்— நேருக்குநேர் தமிழர்களுடன் வெளிப்படையாகவே மோதுகின்ற இன்றைய அரசின் செயல்களினால்தான் தமிழன் தன்னைப் பற்றி சிந்திக்கிறான் போராடுகிறான்!

*

செல்வி ந. பத்மலோஜினி,
குச்சவெளி.

கே: தமிழர்களின் உரிமையைப் பாதுகாப்பதற்கு என்ன செய்யவேண்டும்?

ப: தமிழர்கள் சுதந்திரம் பெறவேண்டும்; சுதந்திரம் பெற ஒரே வழி 'தனிநாடு' தான்!

*



ந. வேணி,
குச்சவெளி.

கே: தந்தை செல்வாவை மகாத்மாகாந்திக்கு ஒப்பிடுகிறார்களே—எதற்காக?

ப: மகாத்மாவைப் போலவே தந்தை செல்வாவும் வாய்மை, நேர்மை, சத்தியம் தவறாதவர்; அரசியலில் நேர்மை ஒன்றையே ஆயுதமாகக்கொண்டவர்!

*

காரையூர்,
உருத்திரன்.

கே: 1978ம் ஆண்டில் தமிழ் இனத்தின் விடிவு காலம் நிச்சயமா?

ப: தமிழினம் எழுச்சிபெற்றால்—அதற்கு முன்னரே கூட அந்தநிலை ஏற்படலாம்!

*

இரா. கந்தசாமி,
சீதுவை.

கே: அண்மையில் உடுவில் பா. உ. அவர்கள் கேட்ட கேள்விக்கு சிங்கள பௌத்த ஏகாதிபத்தியத்தின் தலைவி கொடுத்துள்ள ஆதாரமற்ற பதிலைப்பற்றிதாங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

ப: 'பரமசிவன் கழுத்திலிருந்து பாம்பு கேட்டது— கருடா சௌக்கியமா'' என்ற பாடலே என் நினைவுக்குவருகிறது.

*

காசிஸ்ரீ,
மகிழடித்தீவு
கொக்கட்டிச்சோலை

கே: இலங்கையில் சிங்கள மக்களைப்போல சனப் பெருக்கம் தமிழருக்கும் கூடினால் தமிழ் மக்கள் என்ன செய்வார்கள்?

ப: தமிழ் மக்களின் அரசியல் சக்தி அதிகரிக்கும்; அடிமை நிலைமை துடைத்து தமிழரசு அமைத்துவிடுவார்கள்!

*

இ. வரதராஜ சர்மா,
சுதுமலை.

கே: 'தனிநாடு' கோரிக்கையின் காரணம் யாது?

ப: நாம் எமக்கென சொந்த வீடு கட்டிக்கொள்வது ஏன்?

கே: தமிழர் கூட்டணி முன் வைத்த ஆறு அம்சக் கோரிக்கை எவை?

ப: மொழியுரிமை, மத உரிமை, குடியுரிமை, ஆட்சியுரிமை, சாதிகளற்ற சமவுரிமை, நீதிமன்றத் நிலைநாட்டக்கூடிய படை மனித உரிமை!

*

இளைய தியாகராஜ்
தெமோதர

கே: சிறுபான்மை மதங்களின் விடுமுறைகள் இரத்துச்செய்யப்பட்டமை எதைக்காட்டுகிறது?

ப: பௌத்த சிங்கள வெறியாட்சியின் கோரவடிவத்தை!

● கேள்விகள் அனுப்புவோர் அஞ்சலட்டையில் பின்வரும் முகவரியை வெட்டி ஒட்டி அனுப்ப வேண்டும்.

> திருவாளர் குயுக்தியார்,
>
> 194 ஏ. பண்டாரநாயக்க வீதி.
> கொழும்பு-12.

## பனைஓலைச் சார்பு அன்பளிப்பு

தொழில் முன்னிலைப் பாடத்திட்டத்தின் கீழ் பண்ணைவேலை கற்பிக்கும் பாடசாலைகளுக்கு பனைஓலைச் சார்பு அன்பளிப்பாகக் கொடுக்க மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகத்தினர் முன்வந்துள்ளார்கள். பாடசாலைகளின் அத்தாட்சிப் பத்திரம் கொடுத்து மேற்படி [illegible] பெற்றுக்கொள்ளலாம்.

## பார் எங்கும் சக்தியடா பார்!

— மணிக்கவிராயர் —

எங்கெங்கு காணினும் சக்தியடா — தம்பி
ஏழுலக மவள் சக்தியடா!
இங்கெழும் ஓசையும் சக்தியடா — தம்பி,
இங்கெவர் மூச்சுமோர் சக்தியடா!

அன்று இருந்ததும் சக்தியடா — தம்பி,
அண்ட சராசரம் சக்தியடா!
இன்று இருப்பதும் சக்தியடா — தம்பி,
எங்கெங்கு காணினும் சத்தியடா!

வல்லமை என்பதும் சக்தியடா — தம்பி,
வையகம் சுழல்வதும் சக்தியடா!
சொல்லெனும் வாய்மையும் சக்தியடா — தம்பி.
சங்கரன் பக்கமும் சக்தியடா!

சக்தியவள் சக்தி சொல்லிடவோ — தம்பி,
சிந்தை சிலிர்த்திடும் கேட்டிடவே!
சக்தி — சக்தி எனும் சொல்லினிலே — தம்பி,
சஞ்சலம் தீர்த்திடும் சக்தியுண்டு!

செங்கதிரோன் சுடர் வீச்சினிலும் — தம்பி,
செவ்வந்தி வானத்து நிலவினிலும்
பொங்கு கடலதன் ஆர்ப்பினிலும் — சக்தி
பாரெங்கும் வாழ்வது கண்டோமடா!

தென்றல் தருமொரு இங்கிதத்தில் — தம்பி,
தூய்மை எனும் உளத் தாமரையில்,
மின்னல் இடி புயல் மேகம் மழை — தரும்
ஓங்கார ஓசையில் சக்தியுள்ளாள்!

இல்லையெனில் சக்தி இவ்வுலகம் — தம்பி,
இல்லையடா யாவும் பூஜ்யமடா!
தொல்லை தரும் கொடும்பாவிகளை — சக்தி
தொல்லை கொடுத்துயிர் போக்கிடுவாள்!

சக்திக ளாயிரம் பேசுகிறார் — தம்பி,
சண்டைக ளாயிரம் பண்ணுகிறார்!
எத்தனை சக்திகள் பேசிடினும் — அன்னை
சக்தியவ ளின்றேல் யாதுளதோ...?

இயந்திர சாதனம் சக்தியென்பர் — தம்பி,
இங்குள ஆட்சியும் சக்தியென்பார்!
மந்திர தந்திர வேலைகள் யாவுமோர்
சக்தி யென்பார்! பெரும் சக்தியென்பார்!

காதற் சுவைதரும் கன்னியர் புன்னகை தம்பி,
அற்புத மானதோர் சக்தி யென்பார்!
போதை தரும் மது பானங்கள் யாவுமே — பார்
எங்கணும் ஆனந்த சக்தி யென்பார்!

காலைப் பிடித்தேனும் வேலை யெடுத்திடும்
காரியமும், தம்பி, சக்தி யென்பார்!
சேலைத் தலைப்பிலே ஆண்மை முடிவதும்
'சோஷலிஷம்' காணும் சக்தி யென்பார்!

கட்சிய ரசியல் 'சக்தி' யென்பார் — தம்பி,
'காட்டிக் கொடுப்பதும்' சக்தியென்பார்!
சுட்டுப் பொசிக்கியே — 'காருண்யம்' பேசுதல்
சக்தி யென்பார்! மகா சக்தி யென்பார்!

வாக்காளரை வந்து சக்தி யென்பார் — தம்பி,
வென்றபின் தம்மையே சக்தி யென்பார்!
போக்கிரிகள் வேசம் 'சக்தி யென்றால்' — தம்பி
பகுத் தறிவென்பது ஏதுக்கடா?

சக்திகள் ஆயிரம் சொல்லுகிறார் — தம்பி,
சங்கதிகள் யாவும் நீயறிவாய்!
"புத்திகள் கெட்டவர் பேசுகிறார்' — என்று
பேசுகிறாய் — அதை நானறிவேன்!

ஆதிபரா சக்தி ஓதுகிறாள் — தம்பி,
ஆவலுடன் அதைக் கேட்டிடுவோம்!
பாதி மதியினைச் சாடுகிறாள் — தம்பி
பாங்குடன் நாமத்தைக் கேட்டிடுவோம்!

"சாதிப் பிரிவுகள் இல்லை படைப்பிலே
சூது மதியினர் வேலை மக்காள்!
பேதினியில் எந்தன் மேன்மை மறந்தவர்
மதி கெட்டுப் போயழிவார்கள் மக்காள்''

காலமிருப்பதும் என்னுடனே — மக்காள்,
கடவுள் கடாட்சமும் என் வசமே!
ஞால மிருப்பதும் நானுளதால் — மக்காள்
ஞானியர் கூறிடக் கேட்கலையோ?

பூவில் நறுமண மாயிருப்பேன் — மக்காள்!
பொங்குமா கடலலை யாயிருப்பேன்!
நாவில் ஒலியாக நானிருப்பேன் — மக்காள்!
நல்லவர்க்கு நாளும் துணையிருப்பேன்!

பாலிலும் வெண்மையாய் நானிருப்பேன் — கன்னற்
பாகிலும் தீஞ்சுவை யாயிருப்பேன்!
வேலிலும் கூர்மையாய் நானிருப்பேன் — நல்
வினைகளின் விளக்கமாய் நானிருப்பேன்!

தீமையைச் சங்காரம் செய்திடுவேன் — மக்காள்,
தீயிலும் செந்தன்மை கொண்டிருப்பேன்!
பூமியின் நிலைக் களனாயிருப்பேன் — இதை
புரிந்துயிர் வாழ்ந்திட வேண்டும் மக்காள்!

அராஜகம் தன்னைத் துண்டாடுவேன் — தூய,
அன்புக்கு விளைநில மாயிருப்பேன்!
சர்வாதி காரத்தை ஒழித்திடுவேன் — மக்காள்
சர்வகலா வல்லி யாயிருப்பேன்!''

சக்தியவள் சொல்லக் கேட்டோமடா — தம்பி,
சிந்தனை செய்வதுன் சக்தியடா!
பாரெங்கும் உள்ளதாம் சக்திதனை — சீர்
தூக்கியே பார்ப்பதுன் சக்தியடா!

(பாண்டியூர் திரௌபதியம்மன் ஆலய கலைவிழாவின் கவியரங்கில் பாடியது.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய சுதந்திரப் போரில் எட்டாண்டு சிறைவாசம் அனுபவித்த தீரர்!



சாதாரண மக்களுக்குத் தொண்டு செய்ய—அந்தஸ்து மிக்க குடும்பத்தினர்தான் பதவிப் பொறுப்புகளை ஏற்கவேண்டுமென்றிருந்த ஐதிகத்தை அறவே மாற்றிச் சாமான்ய மக்களுக்குத் தொண்டாற்ற—அந்தச் சாமான்ய மக்களின் மத்தியிலிருந்தே—தலைவர்களைத் தோன்றச் செய்த பெருமை கர்மவீரர் காமராசருக்கே உண்டு. பாரதமக்கள் அடிமை விலங்கொடித்து ...ந்த சுதந்திரம் வர தமது பதினைந்தாவது வயதில் ...ட்டு மக்களுக்காகத் தம்மை அர்ப்பணித்தார் அண்ணல் காமராசர்.

1903ம் ஆண்டு ஜுலை 13ந் திகதி திரு. குமாரசுவாமிக்கும், சிவகாமி அம்மைக்கும் சாதாரண எளிய குடும்பத்தில் பிறந்த காமராசர் தமது 6வது வயதில் தந்தையாரை இழந்தார். ஆறுவது வகுப்புவரை தமிழ் படித்த காமராசர் தமது வறுமை காரணமாக துணிக்கடையொன்றில் வேலை பார்த்தார்.

1921ம் ஆண்டு வீரர் சத்தியமூர்த்தியின் அரசியல் பேச்சில் தன்னை அர்ப்பணித்த காமராசர் உப்புச் சத்தியாக்கிரகத்தின் மூலம் அரசியலில் ஈடுபட்டார். அப்போது அவருக்கு வயது பதினெட்டு. தமது பதினெட்டாவது வயதிலேயே இரண்டாண்டுகள் சிறைவாசம் அனுபவித்த செம்மல் அவர்.

சுதந்திரப் போராட்ட காலத்தில் 8 ஆண்டுகள் சிறையிலிருந்த காமராசர் 1953ம் ஆண்டு முதல் 1963ம் ஆண்டு வரை பத்து ஆண்டுகள் தமிழ் நாடு முதலமைச்சராக விளங்கினார். பிரதமராக இருந்த காலத்தில் தமிழ் நாட்டில் ஏழைகளும் கல்விபெறவும், மதிய உணவு பெறவும் முன்னோடியாக இருந்தார். இதனால் பாரதத்தில் முன் எப்பொழுதும் ஏனைய மாநிலம் எதுவும் செய்யாத அரிய சேவையைச் செய்தார். இதனால் ஏழை மக்கள் மனதில் காமராசர் கண்கண்ட தெய்வமாகத் திகழ்ந்தார்.

தமிழ் மகன் ஒருவர் படிப்படியாகத் தமது மக்கள் பணியால் உயர்ந்து, அகில இந்திய காங்கிரஸ் தலைவராக உயர்ந்தார். 1963 முதல் 1968 வரை அவர் இருதடவைகள் காங்கிரஸ் தலைவராகத் திகழ்ந்தார். தமிழ் மகன் ஒருவர் பாரதத்தின் தலைவராக வந்ததும், ஆறும் வகுப்புப்படித்த ஒருவர் படித்த மக்கள் நிறைந்த தமிழ் நாட்டில் முதலமைச்சராக இருந்ததும், சரித்திரகாரரால் நம்ப முடியாமலிருக்கக்கூடிய நிகழ்ச்சிகளாகும்.

இந்தி—வெறியர்கள் பாரதத்தின் பல பகுதிகளிலிருந்த காலத்தில் — அவர் காங்கிரஸ் தலைவராகி, தமிழ் மொழியிலேயே தமது தலைமைப் பேருரையை நிகழ்த்தியதும் இனி எந்தத் தமிழ் நாட்டுத் தலைவராலும் செய்ய முடியாததொன்றாகும்.

நேருவின் வலது கரமாக இருந்த காமராசர் அவர் மறைவுக்குப்பின் பாரதப் பிரதமர்களை ஆக்கிய "கிங் மேக்கராக" கருதப்பட்டார். பாரதம் மாத்திரமல்ல முழு உலகுமே காமராசரை "கிங்மேக்க"ராக கருதியது.

காங்கிரஸ் கட்சிக்குப் பலத்தை அதிகரிக்க 1963ல் தமது முதன் மந்திரிப் பதவியைத் துறந்தார். தமது திட்டத்தை அமுல் நடாத்துவதற்காகப் பாரதத்தில் பல அமைச்சர்களையும் பதவி துறக்கச் செய்தார்.

முதன் முதல் 1941ம் ஆண்டு பாராளுமன்றத்திற்குத் தெரிவு செய்யப்பட்டார். இறக்கும் வரை கட்டைப் பிரமச்சாரியாகக் காலத்தைக் கழித்த காமராசர் திருமணம் எட்போது என்று நிருபர்கள் கேட்ட போதெல்லாம் "நாடு சுதந்திரம்பெறட்டும்; கலியாணத்தைப் பின் பார்க்கலா"மென்றார். நாடு அவர் கண்முன்னே சுதந்திரம் பெற்றதும் திருமணமா "ஆகட்டும் பார்க்கலா"மென்றார்.

ஆயிரம் உண்டிங்கு சாதி
எனினும் அந்நியர்
வந்து புகல் என்ன நீதி

, என்று கேட்டு வெள்ளையனை வெள்ளியேற்ற அல்லும் பகலும் அயராது பாடுபட்டவர். ஆவடி காங்கிரசில் ஜனநாயக சோசலிசத்தை காங்கிரஸ் கட்சி ஒப்புக்கொள்ள வைத்தவர் அண்ணல். ஒப்புக்கொள்ள வைத்ததுடன் அந்த லட்சியத்திற்காக இறுதி மூச்சுவரை அவர் உழைத்தார்.

எளிய குடும்பத்தில் பிறந்தவர் விரும்பியிருந்தால் விருது நகரிலோ அல்லது டெல்லியிலோ மாட மாளிகை கட்டி வாழ்ந்திருக்கலாம். ஆனால் அண்ணல் காமராசர் விருது நகரில் எந்த வீட்டில் அவதரித்தாரோ அதே வீட்டில் 72 வருடமாக வாழ்ந்து ஏனைய தலைவர்களுக்கும் வழி காட்டியாகத் திகழ்ந்தார். அவரது தன்னலமற்ற சேவையே மாநில எல்லையைக் கடந்து அறுபது கோடி மக்களால் வாழ்த்தி வரவேற்கப்படக் காரணமாக இருந்தது. எழுபத்திரண்டாவது வயதிலும் கிராமம் கிராமமாகச் சென்று மக்களோடு தானும் ஒருவராக வாழ்ந்த அருந் ... ஜயந்தி அன்று அமரரானது குறிப்பிடத்தக்கது.

பாரதம் அவ்வப்போது பல தலைவர்களை இழந்து ஏங்கியிருந்தபோது காமராசர் என்றொரு தலைவன் இருக்கிறான் என்று ஆறுதல் அடைந்தது. இன்று கலங்கலங்கரை விளக்கமாக விளங்கிய காமராசரே மறைந்துவிட்டாரென்று எண்ணும் மக்கள் இனியார் நம் தலைவரென்று கண்ணீர் மல்கி நிற்கிறார்கள்.

நாட்டு மக்களுக்காக செயலால் நிமிர்ந்து நிமிர்ந்து நடைபோட்டவர். பயமெதுவுமின்றி கட்சி பேதமின்றி எல்லோரது குடிசைக்கும் சென்று வந்தவர், மௌனத்தின் வலிமையை நாட்டுக்கு உணர்த்திய தலைமகன் பேச்சு மூச்சின்றிக் கிடந்தபோது, — மக்கள் தமது ஆவியில் ஒருவராக இருந்தவர் அவரராகக் கிடந்தபோது கதறிக் கதறி அழுதனர்.

## காமராசரின் தூய்மையான பொதுவாழ்வு
## அரசியல்வாதிகளுக்கோர் வழிகாட்டி!

தலைவர். ஏனைய தலைவர்களைப்போல் அதிகம் பேசாதவர். சுருங்கப் பேசி செயலில் தீவிரம் காட்டிய காமராசர் மாபெரும் மேதையாக மிளிர்ந்தார். வானவில்லில் காணப்படும் பலவித வர்ணபேதங்களைப் போல் மக்கள் வாழ்விலும் பலவித மாறுதல்களைக்காண விழைந்த விந்தை மனிதர் அவர்.

தமிழ்நாட்டின் இன்றைய வளர்ச்சிக்கு வித்திட்ட பெருமகன் காமராசர். காந்தீயத்தைக் கடைசிவரைக் கடைப்பிடித்த செம்மல் வாழ்வு முழுவதும் எளிமையாக வாழ்ந்தவர். தூய வெண்ணிறவேட்டியும்; தூய கதராடையும் தோளில் ஒரு துண்டும் அவரது ஆடைகள்.

நல்லவர்கள் இறக்கும் போது சில சம்பவங்கள் நாட்டில் நடைபெறும் என்று கூறுவார்கள் ஆன்றோர். பண்டிதர் ஜவர்லால் நேரு, இறந்தபோது ஒரு இடத்தில் நிலம் அதிர்ந்தது. கர்மவீரருக்காக வானம் அதிர்ந்தது. மக்கள் கண்ணீருடன் போட்டியிட்டுக் கொண்டு மேகமும் அழுதது. பீரங்கி தீர்ந்தது. ராணுவ மரியாதைகளுடன் இயற்கையும் மரியாதைசெய்தது.

காமராசர் உண்மையான காந்தீய பக்தர் என்பதற்கு எடுத்துக்காட்டாக, காந்தி

புகழ் பெற்றவர்கள் உலகம் முழுமையும் அடக்கம் செய்யப்படுகிறார்கள் என்று ஆன்றோர் கூறுவர். அது போன்றே காமராசரும் தமிழ் மக்கள் உள்ளங்களிலெல்லாம் கலங்கரை விளக்கமாக விளங்குகின்றார்.

கிண்டியில் காந்திஜி நினைவுமண்டபமும் ராஜாஜி நினைவு மண்டபமும் நிறுவப்பட்டிருக்கின்றது. இங்கு காந்திஜீ நினைவு மண்டபத்திற்கு அருகில் 20 அடி நீளம்

### "புத்தொளி"

12 அடி அகலம், 4அடி உயரமான மேடையில் காந்தியவாதி, கர்மயோகி, சத்தியவாதி 3-10-75 அன்று மாலை 6-40ற்கு தீயுடன் சங்கமமானார்.

வடக்கில் ஓர் இமயம். தென்னாட்டிலும் நடமாடும் இமயமாக வாழ்ந்து கோடைத் தென்றலைப் போல் ஒரு பயனும் கருதாது தொண்டாற்றிய காமராசர் வாழ்வு நமது விடுதலை வீரர்களுக்கெல்லாம் வழி காட்டுமாக!

## கர்ம வீரர்!

"காந்தி அண்ணல் வழித்தொண்டன் சொந்தலாபம்
கருதாத கடும் உழைப்பு தியாகத்தாலே

சார்ந்திருந்த பெருநாடாம் இந்தியாவின்
தலைவர்களைத் தேர்ந்தெடுக்கும் பெருமைகொண்ட

ஏந்தல் தன்னை எதிர்கொண்ட பதவியாவும்
எறிந்திட்டோன் காந்தி மகான் நாளில் ஈங்கு

மாந்தரெல்லாம் தலைவனென மதிக்க வாழ்ந்தோன்
மறைந்திட்டான் மறையாத புகழினோடு.

அரசியலில் புகழ்பெற நல் தகுதிவேண்டும்
அளவற்ற சொத்துள்ள அறிஞன் என்று

கருதவைத்து நாவன்மை காட்டவேண்டும்
கயமை உளம் தேர்தல் வெல்லத்தேவை என்று

இருந்த நிலை மாற்றி இவை ஏதும் இன்றி
எண்ணரிய புகழ் படைத்த தலைவா இன்று

வருந்துகின்ற தலைநகர்த் தமிழரோடு
வணங்குகின்றோம் ஈழம் வாழ் தமிழர் நாங்கள்.

தொண்டுக்காய் இல்லறத்தை விடுத்துச் சொத்து
துளியேனும் தனக்கின்றி நாட்டுக்கீந்து

துண்டொன்று கதராடை தோற்றம் கொண்டு
தூய்மை தரு நேர்மை மிகு துணிவும் கொண்டு

எண் திசையும் புகழ எதிர்க் கட்சியோரும்
இவன் பெரியன் இவன் தலைவன் என்ன வாழ்ந்து

விண்ணுலகு விரைந்த கர்மவீரர் நாமம்
வீழாது புகழ் என்றும் வீசும் வாழும்"

—விஸ்வமடு ஜெயபாலன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எண்ணம்

## அநீதி தொடரும்!

அடுத்த வருடம் பல்கலைக் கழகத்துக்கு எழுபது வீதம் திறமையடிப்படையிலும் முப்பதுவீதம் மாவட்ட அடிப்படையிலும் மாணவர்களை அனுமதிப்பது என்று அரசாங்கம் தீர்மானித்துள்ளது. இது சம்பந்தமாக கெனமன் குழு சமர்ப்பித்த பரிந்துரையை அரசு ஏற்றுக்கொண்டுள்ளதாம்!

இந்தச் செய்தியை நாளேடுகள் கொட்டை எழுத்துக்களில் பெரிதாகப்போட்டு—ஏதோ அரசாங்கம் தமிழ் மாணவர்களுக்கு இதுநாள்வரை இழைத்து வந்த மாபெரும் அநீதியை இதன் மூலம் துடைத்துவிட்டதாக காட்டுவதற்குப் பரிதாபமான முறையில் பிரமப் பிரயத்தனப் படுகின்றன.

அரசு எடுத்துள்ள முடிவை சற்று ஆழ்ந்து அலசி ஆராய்ந்தால், இந்த முடிவினால் தமிழ் மக்கள் மகிழ்ச்சியடையவோ — தங்களுக்கு இது நாள்வரை இழைக்கப்பட்டு வந்த அநீதி துடைக்கப்படவிருப்பதாக களிப்படையவோ—எவ்விதக் காரணமும் இல்லை.

ஏனெனில் தமிழ் மாணவர்களுக்கு செய்யப்பட்டு வரும் படுதுரோகம் — அதாவது மொழிவாரித் தரப்படுத்தல் — தொடர்ந்து இருக்கப்போகிறது!

ஆம், எழுபது சதவீதத்தை திறமையடிப்படையில் அனுமதிப்பது என்று அரசு முடிவுசெய்துள்ள அதே மூச்சில் — இப்போதைய மொழிவாரியடிப்படைத் தரப்படுத்தலையும் தொடர்ந்து கடைப்பிடிப்பதென்றும் தீர்மானித்திருப்பதை இந்நாட்டு நாளேடுகள் தமிழ் மக்களின் கண்களிலிருந்து மறைக்கமுயற்சித்துள்ளன.

மொழிவாரித் தரப்படுத்தல் முறையை நீக்க வேண்டும் என்று கெனமன் குழு முன்வைத்திருந்த பரிந்துரையை அரசு நிராகரித்துவிட்டது! இது விஷயத்தில் சிங்களவெறி நிறுவனங்களான 'சிங்கள தாருண சன்விதாணய' 'அகில இலங்கை பௌத்த காங்கிரஸ்' போன்றவைகளின் பயமுறுத்தலுக்கு அரசு பணிந்து விட்டது!

இந்நிலையில் பல்கலைக்கழகத்துக்கு எழுபது வீதத்தை திறமையடிப்படையில் தெரிவு செய்வது என்று தீர்மானித்துவிட்டு—மொழிவாரித்தரப்படுத்தலையும் தொடர்வது என்றால் இது உலகை ஏமாற்றக்கையாளப்படும் ஒரு ஏமாற்றுவித்தையென்றே நாம் கருதவேண்டியிருக்கிறது!

**மொழியடிப்படையில் தரப்படுத்தலை செய்துகொண்டு திறமையடிப்படையில் எழுபது வீதமாணவர்களை அனுமதிக்கிறோம் என்றும் கூறுவது ஒன்றுக்கொன்று முரண்பட்டவாதமாகும்; வெறும் கண் துடைப்பாகும்!**

மொழிவாரியடிப்படையில் தரப்படுத்தி—சிங்களமாணவனுக்கு 225 புள்ளிகள்; தமிழ் மாணவனுக்கு 250 புள்ளிகள்; என்ற பாரபட்சக் கொள்கையையும் பின்பற்றிக்கொண்டு அதே வேளையில் திறமையடிப்படையிலேயே நாங்கள் மாணவர்களைத் தெரிவு செய்யப்போகிறோம் என்று கூறுவது ஏமாற்று வித்தையாகவே கருதப்படும்.

உண்மையிலேயே திறமையடிப்படையில் பல்கலைக் கழகத்துக்கு மாணவர்களை அனுமதிப்பது அரசாங்கத்தின் கொள்கையாக இருந்தால்—மொழி வாரித்தரப்படுத்தலை அது கைவிட்டேயாகவேண்டும்! மொழிவாரித்தரப்படுத்தலை அது தொடர்ந்தும் பின்பற்றுமாக இருந்தால்—திறமையடிப்படையையும் பின்பற்றுவதாக கூறுவது அர்த்தமற்றதாகிவிடும்! ஒன்றுக்கொன்று முரண்பட்ட — நடைமுறை சாத்தியமற்ற—வெறும் கேலிக்கூத்தாகவே முடியும்!

இந்நாட்டுத் தமிழ் மக்களைப் பொறுத்தவரையில்—தமிழ் மாணவர்களைப் பொறுத்தவரையில்—மொழிவாரித் தரப்படுத்தல் முறை முற்றாக நீக்கப்படும் வரையில்—பல்கலைக்கழக அனுமதியில் அவர்களுக்கு ஒருபோதும் நீதி கிடைக்கமுடியாது.

**மொழிவாரித்தரப்படுத்தல் முறை — திறமையும் தகுதியும் உடைய தமிழ் மாணவனைப் பின்னுக்குத் தள்ளி விடுகிறது. திறமையும் தகுதியும் உடைய தமிழ் மாணவனைத் தரப்படுத்தலின் கீழ் முதலில் குப்புறத் தள்ளி வீழ்த்தி விட்டு — அதன் பின்னர் "திறமை அடிப்படை"யைப் பின்பற்றுகிறோம் என்று கூறுவது வெறும் கண்துடைப்பாகவும் பாசாங்காகவும் கருதப் படுமே தவிர — தூய்மை நிறைந்ததென்று கூறமுடியாது!**

எனவேதான் கூறுகிறோம்—அரசாங்கம் உண்மையிலேயே பல்கலைக்கழகத் தெரிவில் திறமையடிப்படையை புகுத்த விரும்பினால் அது செய்யவேண்டிய முதல் வேலை 'தரப்படுத்தல்' போன்ற தடைகளை அகற்றுவதே. ஆனால் தரப்படுத்தலையும் கைவிடாமல் அதே நேரத்தில் திறமையடிப்படையையும் பின்பற்றுவதாக அரசு போலித்தனமான நாடகத்தில் ஈடுபட முயற்சிக்கிறது.

அரசின் இத்தகைய கண்துடைப்பு நடவடிக்கைகளாலும்—நாளேடுகள் நடத்தும் நச்சுத்தனமான பிரச்சாரத்தாலும் புத்திசாலியான தமிழ் இளைஞன் ஏமாந்துவிடமாட்டான். 'தரப்படுத்தல்' என்ற ஒன்றுக்காக மட்டுமல்ல—தமிழ் சமுதாயம் வாழ்வதற்கு ஒரேவழி தனித் தமிழ் ஈழம் ஒன்றை அமைப்பதுதான் என்பதை உணர்ந்து அந்தப்புனித இலட்சியத்திற்காக தமிழ் இளைஞன் தன்னை ஒப்படைத்து இன்று போராடி வருகிறான்!

இந்தப்புனிதமான போராட்டப்பாதையிலிருந்து எந்தவிதமான கண்துடைப்புக்களாலும்—பாசாங்குகளாலும்—சலுகைகளினாலும்—தமிழ் இளைஞனைப் பிரித்துவிட முடியாதென்பதை அரசுக்கு அறுதியிட்டுக் கூறிவைக்க விரும்புகிறோம்!

# வீறுகொண்டெழுந்தனர்

## சுழிபுரம் விக்டோரியா மாணவர்கள்!

## அவசரகால விதிகளை மீறி ஊர்வலம்! கோரிக்கை வென்றது; ராஜ்குமார் விடுதலை!

சுழிபுரம் விக்ரோறியா கல்லூரியில் [1-10-1975] புதன் கிழமை அக்கல்லூரியில் கல்வி பயிலும் மாணவனான செல்வன் அல்பேட் இராஜ்குமாரை இரண்டு துப்பறியும் பொலிசார் வந்து கைது செய்து சென்றார்கள். அம் மாணவனை அன்று மாலை 3 மணிக்குள் கொண்டு வந்து விடுவதாகக் கல்லூரி நிர்வாகத்தினருக்கும் மாணவர்களுக்கும் கூறிவிட்டுச் சென்றார்கள், அடுத்து வரும் உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றவிருக்கும் மாணவன், கல்வியில் சிரத்தைகொண்டு, மிகவும் கவனமாகப் படித்துக்கொண்டு வந்தான். **அவனைக் கைது செய்யப்பட்ட நேரத்திலும் கூட அவன் வகுப்பில் படித்துக்கொண்டிருந்தான்.**

இந் நிலையில் அம் மாணவனைக் கைதுசெய்து கொண்டு போன காட்சி; அங்கு கல்வி பயிலும் எம் இரத்தத்தின் இரத்தங்களுக்குப் பொறுக்கவில்லைப் போலும். அவ்விளைஞனை ஏற்றிக்கொண்டு செல்லவந்த வண்டிக்கு கல்லூரியில் கல்வி பயிலும் சாதாரண வகுப்பு மாணவனொருவன் ஒரு கல்லால் எடுத்து எறிந்தானும். அக் கல்லானது துப்பறியும் பொலிஸ் நாயொன்றுக்கு கழுத்தில் பட்டுக் காயமுற்றதாம். கோபம் கொண்ட அந்த பொலிசார் கல் எறிந்தஇடத்திற்குச்சென்று யார் கல்லால் எறிந்ததென்று அங்கு நின்ற மாணவர்களைக்கேட்டார்களாம். அப்போது ஒரு மாணவன் கல் எறிந்ததாக ஒரு மாணவனைக் காட்டிக்கொடுத்தானும்.

மாணவன் இராஜ்குமாரை 3 மணிக்குள் கொண்டு வந்து விடுவதாகக் கூட்டிச் சென்றதால் அக் கல்லூரி மாணவர்கள் அன்று ஒரு நடவடிக்கைகளும் எடுக்க முற்படவில்லை. இதற்கிடையில். இதே கல்லூரியில் கல்வி பயின்று வந்த எம் தமிழ்த்தாய்; அதுவும் வீரத்தாய் பெற்றெடுத்த இரு கண்மணிகளான ஸ்ரீதரன் அருந்தவராசா ஆகியோர் முதலே கைது செய்யப்பட்டு காவலில் வைத்திருப்பது குறிப்பிடத்தக்கது. இவர்களும் உயர்தர வகுப்பு மாணவர்கள். இந்தச் செயலும் அங்கு கல்வி பயிலும் ஏனைய மாணவர்களுக்கு கவலையையும் கோபத்தையும் உண்டாக்கியிருந்தது.

### மாணவர் கொதிப்பு

அக்டோபர் 2ம் நாள் காலை எட்டு மணியிருக்கும் விக்ரோறியாக் கல்லூரிப் பக்கம்சென்றேன். தமது சக படியான மாணவன் இராஜ்குமார் விடுதலைசெய்யப்படவில்லை என்பதை உணர்ந்த உயர்தர வகுப்பில் படிக்கும் தன்மான இளைஞர்கள் கொதித்தெழுந்தார்கள். உரிமைகள் மறுக்கப்படுகின்றது நாம் கல்வி கற்கவும் தடையா? இன்று இராஜ்குமாருக்கு என்றால் நாளை எங்களுக்கும் இதே நிலைமை நடக்கும்'' என்பதை உணர்ந்தார்கள். தங்கள் வகுப்பறைக்குச் செல்லாது உயர்தர வகுப்பில் படிக்கும் மாணவர்கள் யாபேரும் வகுப்பறைகளை பகிஷ்கரித்தார்கள். கல்லூரி ஆரம்பமாகும் நேரம் வந்ததும் இவர்களின் நிலையைக் கண்ட சாதாரண வகுப்பு மாணவர்களும் வகுப்பறைகளை விட்டு வெளியேறி, கல்லூரி வாசலை முற்றுகையிட்டார்கள். கல்லூரியில் உயர்தர வகுப்பில் கல்வி பயில்கின்ற இருநூறுக்கு மேற்பட்ட மாணவ மாணவியர்கள் [illegible] வெளியேறினார்கள்.

உயர்தர வகுப்பு மாணவன் ஒருவனைக் கல்வி கற்றுக்கொண்டிருந்தவேளையில் கைதுசெய்து சென்றவர்கள் மீது உடனடி நடவடிக்கை எடுக்கவேண்டுமென்றும்; இதே போன்ற நிலைமை எமது கல்லூரியில் இனிமேலும் நடக்கக் கூடாதென்றும் வடமாநில வித்தியாதிபதிக்கும், வடமாநில பொலிஸ் அதிபருக்கும் தெரிவிக்கு முகமாக கல்லூரி முன்றலில் இருந்து ஆரம்பமாகி பன்னிரண்டு மைல் தொலைவிலிருக்கும் யாழ் நகர் நோக்கி மௌன ஊர்வலம் ஒன்றை நடாத்திக் காட்டுவோம் என்றும் முடிவெடுத்தார்கள்.

### மாணவிகள் உறுதி

முடிவுகள் எடுத்த சில நிமிட நேரத்தால் ஊர்வலம் ஆரம்பமாகியது. உணர்ச்சியுள்ள கல்லூரியின் ஏனைய சாதாரண வகுப்பு மாணவர்களும் அவ்வூர்வலத்தில் கலந்துகொண்டனர் ஊர்வலத்தைப் பார்த்தபோது என் உள்ளமெலாம் பூரிப்படைந்தது. அவர்களிடையே காணப்பட்ட ஒழுக்கம்; அவர்கள் இருநூறுக்கு மேற்பட்டவர்களாய் இருந்தும்; வீதி ஓரமாக அவர்கள் சென்ற பண்பாடு; அங்கு தலைமையாகக் கடமை புரிந்த இளைஞர்களின்சொற்படி நடந்து சென்ற காட்சிகள் எல்லாம் என் உள்ளத்தைக் கவர்ந்தன.

தங்கள் உடன்பிறப்புக்களான மாணவிகள் ஊர்வலத்தில் வந்தால் பொலிசார் அடக்குமுறையில் இறங்கும் போது பிரச்சினை ஏதும் வரும் என நினைத்த மாணவர்கள் அவர்களைத் தடுத்த போதும் அம்மாணவிகள் கொண்டிருந்த உற்சாகமும், பன்னிரண்டு மைல் தூரத்தை மட்டுமல்ல; இன்னும் எத்தனை மைல் தூரமென்றாலும் நாம் நடந்து வரத் தயாராக இருக்கிறோமென பறைசாற்றி புதிய புறநானூறு படைக்கின்ற வீரத் தாயக்குலமாய் தன் நாட்டின் விடுதலைக்காய் தன் வாழ்வை அர்ப்பணித்த வங்கத்து மங்கை செலினவைப் போல் விரைந்தெழுந்து சென்றார்களே! அதைக் காணுகின்றபோது நம் இனத்தின் விடுதலைக் காலம் நெருங்கி விட்டது என்பதை அறிந்தேன்.

### மக்கள் வாழ்த்தினர்

வீதிகள் இரு மருங்கிலும் மக்கள் கூட்டம் திரண்டது. ஏதென்று அறியாது திகைத்தது. யாது நடந்ததென வினவிய வினக்களுக்கு நடந்த நிலைமையை எடுத்துக்கூறிச் சென்றேன். மக்களும் இப்படிச் செய்தால் தான் ஆட்சிப் பீடத்தார்க்கும் அடி நக்கும் கூட்டத்தார்க்கும் ஒரு பாடமாக இருக்கும் என்று பேசிக் கொண்டார்கள். மக்களும் நல்லாசிகள் கூறி வழி நெடுகிலும் அனுப்பிவைத்தனர்.

இந்தக்கூட்டத்தில் பொலிசார் குறுக்கிட்டு இந்த அருமையான ஊர்வலத்தை தடுத்து விடுவார்களோ என்று ஏங்கிச் சென்றேன். ஊர்வலமும் வடக்கம்பரை அம்மன் கோவிலடியை தாண்டி சித்தங்கேணிச் சந்தியை அண்மித்துக் கொண்டிருந்தது. அப்போது பொலிசார் நிறைந்த வண்டி ஒன்று எம் அருமை மாணவச் செல்வங்களை எதிர்த்து வந்தது. சங்கானைப் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியும் அங்கு வந்து சேர்ந்தார். சில பொலிசார் சித்தங்கேணிச் சந்தியில் இறக்கி விடப்பட்டனர். இவர்களைக் கண்டு தமிழ் உணர்வுமிக்க மாணவ மாணவிகள் நிலை குலையவில்லை. அவ்வூர்வலத்துக்குத் தலைமை தாங்கிச் சென்ற இளைஞர்களை பொலிஸ் அதிகாரி அழைத்து விசாரித்தார். அடக்கு முறைக்கும் அதிகாரவர்க்கத்தாருக்கும் அஞ்சாத நம் இளைஞர்கள் அவரது கேள்விகளுக்குத் தக்க பதில் அளித்தனர். தாம் கோஷங்கள் எதுவும் எழுப்பாமல் அமைதியான முறையில் இவ்விரண்டு பேராய் வரிசையாகச் செல்லப் போகிறோம் என்றும் மாணவத் தலைவர்கள் கூறினார்கள்.

அதற்கு இசைந்து கொடுக்காத பொலிஸ் அதிகாரி சித்தங்கேணிச் சந்தியைக் கழித்து ஒரு அடிதானும் நகர விடமாட்டேன். வேண்டுமானால் இச்சந்தியில் நின்று பேருந்து வண்டியில் ஏறி நீங்கள் செல்லவேண்டிய இடத்திற்கு செல்லலாம் என்றார்.

### நம்மை அசைக்க முடியாது

அதை மறுத்து நம் இளம் செல்வங்கள் ஊர்வலம் நடத்தப்போவதாக அவருக்கு கூறினார்கள். அண்மையில் யாழ்ப்பாண வளாகத்தின் வட்டுக்கோட்டை பிரிவில் ஏற்பட்ட சில சச்சரவுகளால் அங்கு பயிலுகின்ற பட்டதாரி மாணவிகளும் இதே போன்ற நடவடிக்கையில் ஈடுபட்டபோது தாம் அனுமதி அளிக்கவில்லை என்றும் அதன் பின்னர் அவர்கள் பேருந்து வண்டிகளில் ஏறிச்சென்றார்கள் என்றும் அவ்வதிகாரி மேலும் கூறியதைத் தொடர்ந்து எம் மாணவ மாணவிகளின் பேருந்தில் ஏறிச்செல்வதென முடிவுக்கு வந்தனர். கடைசியாய் சித்தங்கேணிப் பிள்ளையார் ஆலயத்தில் இருந்து இரண்டு பேருந்து வண்டிகளில் ஏறினர்.

அப்போது "அசைக்க முடியாது நம்மை அசைக்க முடியாது" என்ற பாட்டை வானொலிப்பெட்டியொன்று இசைத்ததைப் பார்த்த போது சித்தங்கேணி விநாயகர் விடையளிப்பது போலவே இருந்தது.

### ஊர்வலம்

உணர்ச்சிக் கவிஞனின் பாடல் இசைத்துக்கொண்டு

—5-ம் பக்கம் பார்க்க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரரின் கனவை நனவாக்குவோம்! தமிழ் ஈழம் அமைத்தே தீருவோம்! உரிமைகள் கிடைக்கும்வரை ஓயமாட்டோம்!

"இந்த நாட்டில் இருக்கும் தமிழ் இன மக்கள் எல்லோரும் தங்கள் சகல உரிமைகளையும் இழந்து இன்று அடிமைப்பட்ட நிலையில் வாழுகின்றுர்கள். இந்த நிலையில் நாம் நமது சில உரிமைகட்காக போராடுவதை விடுத்து அமரர் திரு. இராசமாணிக்கம் அவர்கள் அன்று ஆரம்பித்து வைத்தபடி, இந்த நாட்டு தமிழ் மக்கள் எல்லோரும் சுதந்திரத்துடன் வாழக்கூடியவாறு தமிழ் ஈழத்தை — நமக்கென்று ஒரு தனிநாட்டை அமைக்க போராடவேண்டும். இன்று அரசு உள்ள நிலையில், இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்கள் எல்லோரும் ஒன்றுபட்டுப் போராடி தமிழ் ஈழத்தை அமைக்கவேண்டும். அப்படி நாம் செய்தால் தான் மறைந்த எம் பெரும் தலைவர் அமரர் திரு. இராசமாணிக்கம் அவர்களின் ஆன்மா சாந்தியடையும்."

இவ்வாறு கடந்த 7ந் திகதி களுவாஞ்சிக்குடி இராசமாணிக்கம் அரங்கில் நடைபெற்ற மறைந்த தனிப் பெரும் தலைவர் அமரர் திரு. சி. மூ. இராசமாணிக்கம் அவர்களின் முதலாவது சிரார்த்ததினக் கூட்டத்தில் கலந்து கொண்டு சொற்பெருக்காற்றிய தமிழர் கூட்டணி செயலாளர் நாயகம் நாவலர் அமிர்தலிங்கம் அவர்கள் குறிப்பிட்டார்.

களுவாஞ்சிக்குடியில் அமரர் திரு. இராசமாணிக்கம் அவர்களின் ஞாபகார்த்தமாக பல்லாயிரக்கணக்கான ரூபா செலவில் அமரர் இராசமாணிக்கம் ஞாபகார்த்த கலாச்சார மண்டபம் அமைக்கப்படவிருக்கும் மைதானத்தில் இந்த நினைவு தினக்கூட்டம் நடைபெற்றது. இராசமாணிக்கம் ஞாபகார்த்த சபை தலைவர் திரு. பி. இராசரத்தினம் அவர்கள் தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில், கூட்டம் ஆரம்பமாவதற்கு முன்னர் அன்னரின் ஆன்மா சாந்தியடையும் பொருட்டு இரண்டு நிமிட நேரம் மௌனம் அனுட்டிக்கப்பட்டது.

## அமரர் இராசமாணிக்கம் நினைவுதின விழாவில் தலைவர் நாவலர் முழக்கம்!



அதைத் தொடர்ந்து அமரரின் ஞாபகார்த்தமாக அமைக்கப்படவிருக்கும் கலாச்சார மண்டபத்துக்கான பெடர்ப்பலகையை ஞாபகார்த்த சபையின் உபதலைவர் திரு. க. அ. பாக்கியன் அவர்கள் திரை நீக்கம் செய்து வைக்க கூட்டம் ஆரம்பமாகி நடைபெற்றது. அங்கு திரண்டிருந்த பலலாயிரக்கணக்கான மக்களிடையே திரு அமிர்தலிங்கம் அவர்கள் தொடர்ந்து பேசுகையில், கூறியதாவது:—

பட்டிருப்புத் தொகுதிக்காக மட்டுமல்ல அகில இலங்கை வாழ் தமிழ்ப் பேசும் மக்களுக்காகவும் தம் வாழ் நாளை அர்ப்பணித்தவர் அமரர் இராசமாணிக்கம் அவர்கள். அன்று மட்டக்களப்பு மாவட்டத்தில் இருக்கும் தமிழ்ப் பேசும் மக்கள் தக்கதொரு தானைத் தலைவன் இல்லாமல் தத்தளித்துக் கொண்டிருந்த போது 1955ம் ஆண்டு அரசாங்கத்தைவிட்டு வெளியேறித் தமிழ் மக்களுக்கு சேவை செய்யத் தொடங்கியவர் அமரர் இராசமாணிக்கம் அவர்கள்.

"தந்தை செல்வா அவர்கள் தமக்கு தக்கதொரு பக்கபல சகோதரனை தேடிய போதுகிடைத்தவர் அமரர். அவர் இந்நாட்டில் இருக்கும் வால் பிடியாளர்கள் போன்று அரசை வால் பிடித்திருந்தால் ஈழம் வாழ் தமிழ் பேசும் மக்களின் பெயரே இன்று அழிந்தொழிந்திருக்கும். ஆகவே தமிழ் மக்களாகிய நாம் அமரரின் கனவை நனவாக்கி ஈழத் தமிழகம் அமைப்போம். உரிமை கிடைக்கும் வரை ஓயாது போராடியே தீருவோம்.

அவரைத் தொடர்ந்து திருவாளர் செ. இராசதுரை, பா. உ. திருமதி மங்கையற்கரசி அமிர்தலிங்கம், சொல்லின் செல்வன் பூ. மதுரநாயகம், உட்பட பலர் உரையாற்றினுர்கள். அத்தோடு சிறப்பு நிகழ்ச்சியாக களுவாஞ்சிக்குடி கண்ணன்கலைக் கழகத்தின் அமரரின் வாழ்க்கைவரலாறு பற்றிய வில்லிசை நிகழ்ச்சியும் இடம் பெற்றிருந்தது. அன்றைய தினம் அமரரின் இல்லத்தில் அன்னதானமும் வழங்கப்பட்டது.

## மத்திய வங்கித் தமிழ் ஊழியர் வழங்குவர்!

மத்திய வங்கித் தமிழ் ஊழியர் மன்றத்தினர் தங்கள் மன்றத்தின் சார்பில் சிறையிருக்கும் தமிழ் இளைஞர்களின் குடும்பங்களுக்கு உதவும் நிதிக்கு ரூபா 500-00 வழங்குவதற்கு முடிவுசெய்தது தெரிந்தே. இதைத் தவிர, ஊழியர்களிடம் தனிப்பட்ட முறையிலும் ஒரு தொகை இந் நிதிக்காக திரட்டப்பட்டிருப்பதாகவும், இத்தொகை மிகவிரைவில் நிதிப்பொறுப்பாளரிடம் கையளிக்கப்படுமென்றும் திரு. மா. க. கனகேந்திரன் தெரிவித்தார்.

## சிறையிருக்கும் தமிழ் இளைஞர் நிதிக்கு நீர்கொழும்பில் பேராதரவு!

சிறையிருக்கும் தமிழ்இளைஞர்களின் குடும்பங்களுக்கு நிதிதிரட்டும் நிகழ்ச்சி நீர்கொழும்பு-கொச்சிக்கடைப் பகுதிகளில் கடந்த 4.10.75 சனிக்கிழமை நீர்கொழும்பு தமிழிளைஞர் பேரவையினரின் ஆதரவுடன் உற்சாகமாக நடைபெற்றது. வர்த்தகர்களும் பொதுமக்களும் நிதி வழங்குவதில் அதிக ஆர்வமும் ஒத்துழைப்பும் நல்கினர்.

நிதி சேகரிக்கும் பணியில் திருவாளர்கள் கோவை மகேசன், இ. பேரின்பநாயகம், தா. சண்முகநாதன், ஆ. ரகுபதி பாலசிறீதரன், வே. சௌந்தரராசன், நாதன் உ. பரராசசேகரம் ஆகியோர் ஈடுபட்டிருந்தனர்.

## உடுப்பிட்டி சிவா பேசுகிருர்!

கொழும்பு தொழில் நுட்பக் சல்லூரித் தமிழ் மன்றத்தினர், எதிர்வரும் 11-10.75 சனிக்கிழமை மாலை மூன்று மணிக்கு வாணி விழாவை, கல்லூரி மண்டபத்தில் மன்றத்தலைவர் திரு. நியூட்டன் ஞானச்சந்திரன் தலைமையில் கொண்டாடுகின்றனர். முன்னுள் உபசபாநாயகரும், தமிழர் கூட்டணித் தலைவர்களில் ஒருவருமான திரு. மு. சிவசிதம்பரம் சிறப்புரை நிகழ்த்துவார்.

## சிங்கள வெறி...

—1-ம் பக்கத் தொடர்

கிளர்ச்சி செய்துவருவதும் தெரிந்ததே.

கெனமன் தலைமையில் நியமிக்கப் பட்டிருந்த 'செக்டோரல்' குழு, பல்கலைக் கழக அனுமதி விஷயத்தில் தற்போது பின்பற்றப்பட்டு வரும் மொழிவாரித்தரப் படுத்தல் முறையை கைவிட வேண்டுமென்று அரசுக்கு பரிந்துரைத்திருந்தது.

மொழிவாரித் தரப்படுத்தல் முறையை கைவிடக் கூடாதென்றும் அப்படிச் செய்வது சிங்கள இனத்துக்கு செய்யும் துரோகமென்றும் இதைக் கைவிட்டால் பாரதூரமான விளைவுகள் ஏற்படுமென்றும் சிங்கள இனவெறி நிறுவனங்கள் அரசுக்கு எச்சரிக்கை விடுத்தன. "சிங்கள தாருண சன் விதாயை" என்ற சிங்கள மாணவர் இயக்கமும், அகில இலங்கை பௌத்த காங்கிரசும் இதில் குறிப்பிடத் தக்கன. பரீட்சை ஆணையாளர் திரு. போகொட பிரேமரத்தினவும் மொழிவாரித் தரப்படுத்தல் நீக்கப்படுவதற்கு எதிர்ப்புத்தெரிவித்திருந்தார்.

இறுதியாக, இப்போது நடைமுறையிலிருக்கும் மொழிவாரித்தரப்படுத்தல் முறையை கைவிடுவதில்லையென்றும், அதையே தொடர்ந்து பின்பற்றுவதென்றும் அரசும் தீர்மானித்துள்ளது. மொழிவாரித் தரப்படுத்தலைக் கைவிடவேண்டும் என்ற கெனமன் சிபார்சையும் அரசு முற்ருக நிராகரித்துவிட்டது!

இந்தப் பாரபட்சமான காட்டுமிராண்டித் தனமான மொழிவாரித் தரப்படுத்தல் முறையினுல் தமிழ் மாணவர்கள் திறமையிருந்தும் உயர் கல்வி பெறமுடியாமல் தொடர்ந்தும் இருட்டில் தள்ளப்படவிருக்கிருர்கள்.

## துரையப்பா கொலை...

—1-ம் பக்கத் தொடர்

தரணி திரு. மு. சிவசிதம்பரம் தெரிவித்தார்.

அடையாள அணிவகுப்புக்கு கொண்டு வரப்பட்ட இரு சந்தேக நபர்களான வல்வெட்டித் துறையைச் சேர்ந்த பாலசுப்பிரமணியம் கணபதி அல்லது கலாபதி, அரியாலையைச் சேர்ந்த எஸ். கிருபாகரன் அல்லது கிருபைநாதன் ஆகிய இருவரில் பாலசுப்பிரமணியம் கணபதி அல்லது கலாபதி மட்டுமே துரையப்பா கொலையுண்ட சமயம் அவருடன் காரில் சென்றிருந்த எஸ். லோகநாதனுலும் கார்ச்சாரதி சிவனுவாலும் அடையாளம் காட்டப்பட்டதாகவும், மற்ருேர் சந்தேக நபரான கிருபாகரன் அல்லது கிருபைநாதன் இவர்கள் இருவரினுலும் அடையாளம் காட்டப்படவில்லை யென்றும் வேருெருவராலேயே அவர் அடையாளம் காட்டப்பட்டதாகவும் திரு. சிவசிதம்பரம் மேலும் தெரிவித்தார்.

சந்தேக நபர்களின் சார்பில் நீதிமன்றத்தில் திரு. மு. சிவசிதம்பரத்துடன், சட்டத்தரணிகள் சு. நடராசா, சி. நாகராசா, மு. திருநாவுக்கரசு ஆகியோரும் ஆஜராகியிருந்தனர்.

சந்தேக நபர்களின் சார்பில் ஆஜரான சட்டத்தரணி சிவசிதம்பரம் அடையாள அணிவகுப்பை ஆட்சேபித்து முதலில் சட்டப் பிரச்சினையொன்றைக் கிளப்பினுர்.

"பொலிசாரினுல் எந்தக் குற்றச் சாட்டின் பேரிலும் கைது செய்யப்படும் சந்தேக நபர்கள் 24 மணித்தியாலங்களுக்குள் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்படவேண்டும். இச்சந்தேக நபர்கள் விஷயத்தில் பொலிசார் இத்த விதிமுறையை மீறியுள்ளனர். அத்துடன் சட்டத்திற்கு ஒவ்வாத முறையில் சந்தேக நபர்கள் இருவரும் பல தினங்களாக பாதுகாவலில் வைக்கப்பட்டனர். எனவே இந்த அடையாள அணிவகுபபு நடைபெறுவதை ஆட்சேபிக்கிறேன்" என்ருர்.

சட்டத்தரணி சிவசிதம்பரம் கிளப்பிய சட்டப் பிரச்சினையைதான் கவனத்திற்கொண்டு அதை நீதிமன்றப்பதிவேட்டில் பதிவு செய்யுமாறு உத்தரவிட்டுள்ளதாகவும், இது தொடர்பான ஆரம்ப விசாரணையின் போது அவை கவனத்திற்கெடுக்கப் படுமென்றும் மாவட்ட நீதிபதி தெரிவித்தார்.

இரு சந்தேக நபர்களும் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

## அடக்குமுறையை...

—1-ம் பக்ககத் தொடர்

பில் உரும்பராய் இந்துக்கல்லூரி, சைவத்தமிழ் வித்தியாசாலை, சந்திரோதய வித்தியாசாலை, ரோமன் கத்தோலிக்கப்பாடசாலை ஆகியவற்றைச்சேர்ந்த மாணவ மாணவியர் நூற்றுக்கு நூறு வீதம் பங்கேற்றனர். இதன் காரணமாக மேற்படி பாடசாலைகள் பகல் 12மணியுடன் மூடப்பட்டனவாம்.

பகிஷ்கரிப்பில் ஈடுபட்ட உரும்பராய் மாணவ மாணவியருக்கு ஆதரவு தெரிவித்து கோப்பாய் சரவணபவானந்த பாடசாலை [illegible] பகிஷ்கரிப்பில் ஈடுபட்டதாகத் தெரியவருகிறது.


பத்து ரூபாவுக்கு 6 புத்தகங்கள்

தீபாவளிப்பரிசாக சுதந்திரன் வெளியீடுகள்!

● உங்கள் நண்பர்களுக்கு எதிர்வரும் தீபாவளியை முன்னிட்டு அல்லது திருமணம், பிறந்த நாள் பொங்கல் போன்ற திருநாட்களையிட்டு பரிசு அளிக்கவிரும்புகிறீர்களா?

அப்படியானுல், சுதந்திரன் வெளியீடுகளை நீங்கள் பரிசாக அனுப்பிவைக்கலாம்

- O தியாகி சிவகுமாரன் கதை
- O தெருப்புலவர் சுவர்க்கவிகள்
- O துரோகிகளே தூரவிலகுங்கள்
- O தமிழ் மண் காப்போம்—தாயகம் மீட்போம்!
- O இலங்கையில் தமிழர் உயர் கல்வி
- O அனைத்துலக நீதிச்சபை முன் இலங்கைத் தமிழர் பிரச்சினை

● இந்த ஆறு வெளியீடுகளையும் ஒருசேர உங்கள் நண்பர்களுக்கு நீங்கள் பரிசளிக்கலாம்.

● இதற்காக நீங்கள் செய்யவேண்டியதெல்லாம் ரூபா 10-00 ஐ நமக்கு காசுக்கட்டளையாகவோ காசோலையாகவோ அனுப்பிவைத்து, யாருக்கு எந்தத் திகதியில் இவற்றை அனுப்பவேண்டுமோ அந்தத் திகதியையும் அவரது முகவரியையும் எமக்கு எழுதுங்கள்!

● உங்கள் சார்பில் நாமே அதை அனுப்பிவைப்போம்!! வெளிநாடுகளில் உள்ள நண்பர்களுக்கு அனுப்பவேண்டுமாயின் அதற்குரிய தபால் செலவையும் எமக்கு அனுப்புங்கள். உள்ளூரெனில் தபாற் செலவு எம்மைப் பொறுத்தது.

உடனே எழுதுங்கள்!

நிர்வாகி, சுதந்திரன் வெளியீட்டகம்,
194 ஏ, பண்டாரநாயக வீதி, கொழும்பு—12.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# ஆயுதபூசையும் - அதுகூறும் தத்துவமும்!

## விஜயதசமியின்போது தமிழர் சிந்திக்கவேண்டியவை!

பல ஆறுகள் ஓடிச்சென்று ஒரு கடலை அடைவதுபோல, பல திறப்பட்ட வணக்கங்களெல்லாம் இறைவனின் திருவடி நிழலையே சென்று சேர்கின்றன. பன்னிரண்டு திங்கள் கொண்ட ஓராண்டு காலத்தில் அத்திங்கள் பன்னிரண்டிற்கும் பகுத்து, திங்கள்தோறும் வெவ்வேறு விழாக் கொண்டாட்டங்களால் இறைவனை வழிபடுவது மரபு.

அம்முறையில் சக்தி பூசனைக்குரியது நவராத்திரி. ஒன்பது இரவுகள் கொண்ட விழா என்பதையே இச் சொற்றொடர் குறித்து நிற்கிறது. இது கல்விக்கதிபதியாம் புதனுக்குரியது. புரட்டாதித்திங்கள், வளர்பிறைப் பருவத்து முதலாம் நாளாகிய பிரதமைத் திதி முதலாக வரும் ஒன்பது நாட்களாகும். இவ்வொன்பது நாட்களிலும் அன்னை பராசக்தியை மூவேறு வடிவங்களில் மும்மூன்று நாட்களாக வணங்குதல் தமிழர் தம் மரபு;

முதல் மூன்று நாட்கள் ஆற்றலை வழிபடும் மலைமகள் விழாவாக விளங்க, நடுவில் உள்ள மூன்று நாட்களும் அருட்செல்வத்தைவழிபடும் அலைமகள் விழாவாகத் துலங்க, இறுதி மூன்று நாட்களும் அறிவை வழிபடும் கலைமகள் விழாவாக மிளிர்கின்றது. ஆற்றலுக்குத் துர்க்கையும், செல்வத்துக்கு இலக்குமியும், அறிவுக்கு சரஸ்வதியும் சிறந்த தெய்வங்களாக அமைகின்றனர். நாம் ஆற்றும் செயலெல்லாம் நன்கு நிறைவெய்து தற்பொருட்டுஏற்றஆற்றல், தகுந்த செல்வம், தெளிந்த அறிவு இவை யாவற்றையும் அன்னை பராசக்தியே எமக்குத் தந்தருள்வாயாக என வேண்டுதல் சாலவும் பொருத்தமுடையது.

### ஆயுத பூசை

ஆற்றலின் தெய்வமாகிய துர்க்கையையும், அருட்செல்வமாகிய சரஸ்வதியையும் ஒன்பது நாட்கள் முறையே வணங்கப்பெற்று, பத்தாம் நாள் விஜயதசமியில் பெருவெற்றி விழா நடைபெறும் இவ்விழாவை வெற்றி விரும்பு மன்னர் மிகச் சிறப்பாகக் கொண்டாடுவர். இவ்விழாவை "ஆனம்பு" எனவும், "ஆயுத பூசை" எனவும் சொல்வர். அன்னை பராசக்தி மகிடாசுரனை அம்பினுல் மேற்கொள்ளும் காட்சி நிகழுகின்றது. மகிடம் என்றுல் எருமை. மகிடாசுரனை வெல்லுதல், அறியாமை நீங்கி அறிவு சுரப்பதையும், இல்லாமை நீங்கி செல்வம் பெருப்பதையும், இயலாமை நீங்கி ஆற்றல்சிறப்பதையும் குறிக்கும். இது அன்னை பராசக்தியின் திருவருளினுலேயே கைகூடும்.

இந்நாளில் பிள்ளைகளுக்கு ஏடு தொடக்கி வைக்கப் படும். முருகனை வழிபடுவோர் அவனது வெற்றி வேலாயுதத்தைநாட்டி நினைவடையாளமாக்கி, அதனை அவனுகக் கொண்டு வழிபாடு செய்தல்போலக், கல்வித் தெய்வத்தை வழிபடுவோர் கல்விக்கு வேண்டும் ஏடு, இசைக்கருவி முதலியவற்றைத் தொகுத்து நினைவடையாளமாக்கி பூவைத்துக் கோலம் செய்து, அவற்றை நோக்கி மடை முதலியன கொடுத்து வழிபாடு செய்தல் போலப், பண்டைத் தமிழ் மன்னர் வேல், வாள் முதலிய சகல விதமான ஆயுதங்களையும் போர்க்கருவிகளையும் அன்னை பராசக்தி முன்னிலையில் அழகுபட அலங்கரித்து வைத்து பூசை செய்து மிகச் சிறப்புடன் கொண்டாடி வந்தனர்.

### இந்து மதப் பெருமை

இதனுல்தான் "ஆயுத பூசை" என்னும் சொல் பிறந்ததோ என்னவோ...?

முதன் முதல் உலகிற்கு ஆயுதத்தின் மாண்பையும் மகிமையையும் உணர்த்தியது இந்துமதமும் தமிழ் இனமும்தான் என்பதை இந்துமத புராண இதிகாசங்களும் தமிழ் இலக்கிய வரலாறுகளும் மிகவும் தெட்டத் தெளிவாக எடுத்து இயம்புகின்றன. ஆற்றல் தெய்வத்திற்கு ஆயுத பூசை செய்து ஆயுதத்தின் வனப்பையும் வல்லமையையும் தமிழ் உலகிற்கு உணர்த்திய இந்து மதமும் தமிழ் இனமும், அல்லல்படுவோர்க்கு ஆயுத மூலம் விடிவையும் விடுதலையையும் காட்டிய சங்கதிகள் பல இந்துசமய புராண இதிகாசங்களில் உண்டு.

தேவர்களுக்கு கொடுமைகள் பல புரிந்து வந்த சூரபத்மனை தனது வெற்றி வேலாயுதத்தால் கொன்று தேவர்களை கொடுமைகளிலிருந்து காத்து விடிவையும் விடுதலையையும் கொடுத்தார் முருகன். முருகன் வேலாயுதம் மூலம் தேவர்களுக்கு விடிவையும் விடுதலையையும் தேடிக்கொடுத்தது போல, இராமனின் இராமபாணம், கர்ணனின் நாகாஸ்திரம், கிருஷ்ணனின் சங்கு சக்கரம் பரமசிவனின் பாசுபதாஸ்திரம் போன்ற ஆயுதங்கள் புரிந்த சாகசங்கள் பலவற்றை தமிழ் இலக்கிய வரலாறுகள் எடுத்து இயம்புகின்றன! இதிலிருந்து நாம் அறியக்கூடியது என்ன?

ஆதியும் அந்தமும் இல்லா அருட்பெரும் சோதியாய் விளங்குகின்ற இந்துமதமும், கல்தோன்றி மண்தோன்ருக் காலத்திற்குமுன் வாளோடு தோன்றிய மூத்தகுடித் தமிழ் இனமும்தான், முதன் முதலில் ஆயுதத்தின் மாண்பையும் மகிமையையும் அறிந்து, அரக்கத்தனத்திலிருந்தும், அசுரத்தனத்திலிருந்தும்விடிவையும் விடுதலையையும் கொடுக்க, ஆயுதம் ஏந்தி ஆயுதப் புரட்சி செய்தது என்ருல் மிகையாகாது.

### கம்யூனிஸ்ட் வேடிக்கை

இந்து மதத்தினதும் தமிழ் இனத்தினதும் சரித்திரம தெரியாத இலங்கைக் கம்யூனிஸ்ட் தோழர்கள், ஆயுதப புரட்சியின் ஆதாமும் ஏவாளும் சோவியத் யூனியனும் செஞ்சீனுவும்தான் எனக் கொக்கரிப்பது வேடிக்கையானது மட்டுமல்ல — வேதனைக்குரியதும் கூட. இந்து மதமும் தமிழ்இனமும் காட்டாத — காட்ட முடியாத ஆயுதப் புரட்சியையா சோவியத் யூனியனும் செஞ்சீனுவும் காட்டிவிட்டது? சோவியத் யூனியினதும், செஞ்சீனுவினதும் ஆயுதப் புரட்சி பற்றிக் கொக்கரிக்கும் கொம்யூனிஸ்ட் குஞ்சுகள் இந்து மதத்தினதும் தமிழ் இனத்தினதும் புரட்சி பற்றி கொக்கரிக்க மறுப்பது ஏன்? சரி கொக்கரிக்கவேண்டாம். கொள்ளியாவது செருகாமல் விட்டார்களா?

ஆயுதப் புரட்சி பற்றி அகிலத்திற்கு அறைந்து கூறிய இந்து மதத்திற்கும் தமிழ் இனத்திற்கும் ஆட்சியாளர் செய்யும் கொடுமைகளை, செய்யும் அநீதிகளை, ஆயுதப் புரட்சியின் மகிமை பற்றி, அதன் இனிமை பற்றிப் பேசும் இலங்கைக் கம்யூனிஸ்ட் குஞ்சுகள் தட்டிக் கேட்டதில்லை. தட்டிக் கேட்கவேண்டாம். "சூது செய்கிறீர்" எனச் சுட்டியாவது காட்டியதுண்டா? இல்லை. "சபாஷ்" போட்டார்கள் சண்டாளர்கள்.

### தமிழன் விழித்து விட்டான்

இன்று இவர்களையெல்லாம் குறிப்பாகத் தமிழினம் —சிறப்பாக இளம் சந்ததியினர் இனங்கண்டு விட்டனர். இனியும் தமிழினத்தின்

—7-ம் பக்கம் பார்க்க

## அமரர் வன்னியசிங்கம் நினைவுக்கட்டுரை போட்டி

பரிசு ரூபா நூறு!

### கட்டுரைப் போட்டிக்கான தலைப்புக்கள்.

(1) வரலாற்று நாயகர் வன்னியசிங்கம்.
(2) கோப்பாய்க்கோமான் இன்றிருந்தால்...!
(3) வன்னியர் மூட்டிய 'தீ'!
(4) வன்னியர் காணவிரும்பிய தமிழீழம்!

### நிபந்தனைகள்

(1) கட்டுரையுடன் பின்வரும் விண்ணப்பப்பத்திரம் நிரப்பி அனுப்பப்படவேண்டும். விண்ணப்பப்பத்திரம் இன்றி வரும் கட்டுரைகள் போட்டியில் சேர்த்துக்கொள்ளப்படமாட்டாது.

(2) கட்டுரைகள் பூல்ஸ்காப் தாளின் ஐந்து பக்கங்களுக்கு மேற்படக்கூடாது; தாளின் ஒரு பக்கத்திலேயே எழுதப்பட வேண்டும்.

(3) போட்டியில் பங்குபற்றுவோர் 25 வயதுக்குட்பட்டவர்களாக இருக்கவேண்டும்.

(4) நடுவர்களின் தீர்ப்பே முடிவானது.

(5) போட்டிக்கான கட்டுரைகளை அனுப்புவோர் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் 'வன்னியசிங்கம் நினைவுக் கட்டுரைப்போட்டி" என்று குறிப்பிடவேண்டும்.

(6) முதலாமிடத்தை ஒன்றுக்கு மேற்பட்ட கட்டுரைகள் பெறின் பரிசுத்தொகை அதற்கேற்றவாறு பிரித்து வழங்கப்படும். இல்லாவிடின் முதற் பரிசாக ரூபா 50-00, இரண்டாம், மூன்ரும் பரிசுகளாக தலா ரூபா 25வீதம் வழங்கப்படும்.

(7) கட்டுரைகள் அனுப்ப வேண்டிய முகவரி:-

ஆசிரியர், சுதந்திரன்,
194 ஏ, பண்டாரநாயக வீதி
கொழும்பு-12

(8) போட்டி முடிவுத் திகதி—31-10-75

### அமரர் வன்னியசிங்கம் நினைவுக் கட்டுரைப் போட்டி

பெயர்:- ..............................

முகவரி:- ..............................
..............................

வயது:- ..............................

பாடசாலை மாணவர்/மாணவியாயின்
பாடசாலையின் பெயர்:- ..............................

..............................

..............................
ஆசிரியர்/பெற்ருர்/அல்லது
தொகுதி பா. உ. கையொப்பம்

..............................
கையொப்பம்.

## நவராத்திரியும் நமது கடமையும்

உலக மாதாவாகிய திருவருட் சக்தியை விசேஷமாக வழிபட்டு நாம் ஈடேறுதற்காகிய புண்ணிய காலமான நவராத்திரி இம்மாதம் 19ம் நாள் (5-10-75) ஆரம்பமாகவுள்ளது. முதல் மூன்று இரவும் வீரத்தை வேண்டித் துர்க்கா தேவியும் அடுத்த மூன்று இரவும் செல்வத்தை வேண்டி இலக்குமி தேவியும் இறுதி மூன்று இரவும் கல்வியை வேண்டிச் சரஸ்வதி தேவியும் பூசிக்கப்படுவர்.

இவ்வொழுங்கினை எடுத்து நோக்குவோமாயின் எமக்கு மிகமிக அவசியமான உண்மையொன்றினை வெகு சுலபமாகக் காணலாம். அதாவது முதலிலே வீரத்தையே வேண்டி வழிபாடியற்றுகின்ருேம். ஏனெனில் பின்னுல் வேண்டிப் பெறவுள்ள செல்வம், கல்வி என்பனவிரண்டையும் பேணிப் பாதுகாப்பதற்கு வீரம் மிகமிக அவசியமானது. இன்று [illegible] மகத்துச் செல்வம் யாவும் சுரண்டப்படுகின்றது. அதனைத் தடுக்கமுடியாமல் தவிக்கின்ருேம். காரணம் என்ன? வீரம் இல்லை துணிவு போதாது. தரப்படுத்தல் போன்றவற்றுக்கு ஆளாகிக் கல்வி வசதியின்றித் தவிக்கின்ருேம். காரணம் என்ன? வீரம் இல்லை—துணிவு போதாது. எனவே, சைவ அன்பர்களே! துர்க்காதேவியை விசேஷமாக வழிபாடு செய்யுங்கள். அநீதியை—அநியாயங்களை எதிர்த்து வெற்றி பெறும் வீரத்தைப் பெற்று எமது கல்வி, செல்வம் யாவையும் காப்பாற்றுங்கள்.

ஒன்பதாம் நாளன்று புத்தக பூசை, ஆயுத பூசை என்னுமிரண்டினையும் செய்து வந்தனர் எமது முன்னோர். ஆனல் நாமோ இன்று புத்தக பூசையை மட்டுமே இயற்றி வருகின்ருேம். இவ்விடத்தில் தமிழீழத்தின் தகைசால் புலவன் வித்துவான் வேந்தனாரின் பாடலொன்றே ஞாபகத்தில் உதிக்கின்றது.

புத்தகங்கள் பலவடுக்கிப்
பூக்கள் தூவிப்
புதுக் கரும்பும் நறுங்கனியும்
படைத்துப்போற்றி
எத்தனையோ நூற்ருண்டாய்
ஏத்தி ஏத்தி
எழிலாருங் கலைமகளை
இரந்து விட்டோம்
புத்துணர்வும் போர்விறலும்
பொலிய வேண்டில்
புலம்பூத்த இளந்தமிழர்
புகலக் கேண்மின்
கத்தியுடன் ஈட்டிவாள்
தீட்டி வைத்தே
கலைத்தேவி கழல்பரவிக்
கடல் போல் ஆர்ப்போம்.

எனவே இப்புண்ணிய நாளிலே நலிவுற்று வாழும் ஈழம் வாழ் மக்களாகிய நாம் வளங்கனிந்த தமிழ் நாட்டை வந்தோர் ஆள மலர் தூவிக் கலைமகளை வணங்கி என்னும்? இழந்தொழிந்த அரசுரிமை எய்தும் வீரம் எமக்களிப்பாய் கலைமகளே என்று வழிபட்டு அருள் பெற்றுய்வோமாக—நம்மை நாம் ஆள நாளும் உழைப்போமாக.

—க. இராஜமனேகரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் வரலாற்று, பக்திபுராணத் திரைப்படங்கள் இறக்குமதி வெட்டு!

## திரைப்படக் கூட்டுத்தாபனத்தின் நீசத்தனமான செயல்!

"நல்ல தமிழ்ப்படங்களைப் பார்க்கும் வாய்ப்பு இனி இல்லை" என்ற தலைப்பில், அன்று அரசுக்கு வக்காலத்து வாங்கி செய்திகள் வெளியிட்ட 'சிந்தாமணி'யே (டிசம்பர் 24, 1972) செய்தி வெளியிட்டிருந்தது. 'சிந்தாமணி' வெளியிட்டிருந்த இச்செய்தி, இன்று ஏறக்குறைய மூன்று ஆண்டுகளுக்குப் பின் எப்படிப் பலித்துள்ளது என்பதைத் தமிழ் அன்பர்கள் அறிந்துகொள்வது அவசியம்.

1972இல் உருவாகிய சிங்கள அரசின் திரைப்படக் கூட்டுத்தாபனம், இலங்கையிலே தமிழ்த் திரைப்படங்களை இறக்குமதி செய்யும், விநியோகிக்கும் ஏகபோக உரிமையைப் பெற்றுக்கொண்டதன் பின்னர், தென்னிந்தியாவில் தயாரான தமிழ் வரலாற்று, பக்தி, புராணத்திரைப்படங்களை இலங்கையிலுள்ள தமிழ் மக்கள் பார்ப்பதற்குரிய உரிமையைப் பறித்தும் விட்டது.

1971இல் வெளியான "ஆதிபராசக்தி", 1972இல் வெளியான "அகஸ்தியர்", "அன்னை அபிராமி", "சக்தி லீலை", "திருநீலகண்டர்", இவற்றுடன் கிறீத்தவ அன்பர்கள் ஆவலுடன் எதிர்பார்த்திருக்கும் "அன்னை வேளாங்கண்ணி" ஆகிய திரைப்படங்களும்; 1973இல் வெளியான "கங்காகௌரி", "சுந்தரமூர்த்தி நாயனர்", "காரைக்காலம்மையார்", 'திருமலைத்தெய்வம்', "திருமலைத்தென்குமரி" ஆகிய பக்திப்படங்களை இலங்கைத் தமிழ் மக்கள் பார்ப்பதற்கு இன்னும் வாய்ப்புக்கிட்டவில்லை. ஆக, 1972இல் வெளியான "தெய்வம்," 1973இல் வெளியான "ராஜ ராஜ சோழன்" ஆகிய இரண்டுமே இலங்கை ரசிகர்களுக்கு காண்பிக்கப்பட்டுள்ளன.

இதே வேளையில், தமிழகத்தில் தயாரான மூன்றுந்த[...] கழிவு "கௌபாய்" பாண[...] படங்களான "ரகசி[...] பெண் 117", "ஜக்கம்ம[...] "காதலிக்கவாங்க", "கங்கா" போன்ற படங்களை மட்டும் திரைப்படக்கூட்டுத்தாபனம் தமிழ் ரசிகர்களுக்கு இங்கு போட்டுக் காட்டியதும் குறிப்பிட்டாக வேண்டும்.

தரமான, தமிழ் வரலாறு கூறும், தமிழ்ப்பண்பாட்டை விளக்கும் பக்திப்படங்களை தமிழ் மக்களுக்கு அளிக்காது, மூன்றுந்தர தமிழ்ப் படங்களை இறக்குமதி செய்து, இங்கு காட்டும் திரைப்படக்கூட்டுத்தாபனத்தின் நீசச்செயலை இலங்கை வாழ் தமிழ்த் திரைப்பட ரசிகர்கள் நன்கு புரிந்து கொள்ளவேண்டும்.

மேலும், அண்மையிலே 'டெய்லி நியூசில்' (செப்டம்பர் 27. 1975) வெளியாகியிருந்த, திரைப்படக்கூட்டுத்தாபனத்தின் 'வெற்றிப் பாதை'யை விளக்கும் விளம்பரத்தை நோக்கியபோது தென்பட்ட இருதகவல்களையும் தமிழ்த்திரைப்பட ரசிகர்கள் மனதில் கொள்ள வேண்டும்.

1969இல், இறக்குமதியான ஏறக்குறைய 62 கிழக்கத்திய (அதாவது — தமிழ், இந்தி) திரைப்படங்களின் எண்ணிக்கையானது, 1974இல், 22 ஆகக் குறைக்கப்பட்டு விட்டது. அத்துடன், நட்சத்திரக் கூட்டம் நடித்துள்ள கலர் திரைப்படங்களை இறக்குமதி செய்தலும் குறைக்கப்பட்டுள்ளதாம். ஏனெனில், தேசியத் தயாரிப்புக்கள் இவற்றுடன் நேரடியான போட்டியில் ஈடுபட முடியாத நிலையில் இருப்பதும், வடக்குகிழக்குப் பகுதிகளில் தேசியத் தயாரிப்புக்கள் முதலில் திரையிடப்படுகையில், அவற்றுடன் போட்டியிடுவதும் இதற்கு காரணங்களாம். [46, Reduction of import of star - cast clour films so that they would not be directly competitive with the National product and challenging their first exhibition to Northern and Eastern areas.]

இவற்றிலிருந்து விளங்குவது என்ன? குற்றுயிரும் குலையுயிருமாகவுள்ள தமிழகத்துக்கும் ஈழத் தமிழருக்குமிடையிலுள்ள கலை, கலாச்சாரப் பரிவர்த்தனையை, முற்றாகத் துண்டித்துவிடுவதிலே, தற்போதைய சிங்கள அரசானது திரைப்படக் கூட்டுத்தாபனத்தையும் ஒரு பலம் வாய்ந்த கருவியாகப் பாவித்து வருகின்றது என்பதே. இவ்வநியாயத்தை, தமிழ்ப்பண்பாட்டைக் காக்கவிரும்பும் ஈழத் தமிழ் அபிமானி ஒவ்வொருவனும் எதிர்த்துப் போர்ப்பரணி எழுப்பவேண்டும் என்பதைச் "சுதந்திரன்" வாயிலாக எடுத்துரைப்பதில் நாம் பெருமைப்படுகிறோம்.

**சச்சிதானந்தம் ஸ்ரீகாந்தா**
(தலைவர்: கொழும்பு வளாகத் தமிழ் சங்கம்)

# கட்டுபெத்தை கலைவிழா —ஒரு நோக்கு

கட்டுபெத்தை வளாக தமிழ் மன்றத்தினரின் கலைவிழாவில் முதன்முதலாக மேடையேற்றப்பட்டது 'நாற்காலிக்காரர்' எனும் நாடகமாகும்.

கோஷம் போடும் இரு கோஷ்டிகளிடம் சிவனே எனத் தம்பாட்டில் இருக்கும் ஒரு சிலர் வீணுக மாட்டிக்கொண்டு கஷ்டப்பட வேண்டி ஏற்படுவதை சித்தரிப்பதாக அமைந்த இந்நாடகம் முழுவதிலும் தேவைக் கதிகமான கோஷமே மலிந்திருந்தது.

தொடர்ந்து மேடையேறியது 'எழிலரசி' இசை நாடகம் எழிலரசியாகத் தமிழன்னையையும், அவள் சிறப்பையும், வளத்தையும் உருவகித்த தயாரிப்பாளர்கள், தமிழர் எவ்வாறு சிங்களக் கட்சிகளான சிவப்பு, நீல; பச்சைக் கட்சிகளால் ஏமாற்றப்பட்டு வந்தார்கள் என்பதையும், தமிழனை வைத்து எவ்வாறு சிங்கள மக்களிடையே இக்கட்சிகள் செல்வாக்குப்பெற்றன என்பதையும், அவர்களின் முடிவு எவ்வாறு அமையப் போகின்றதென்பதையும் தாளலய நாடகம் மூலமும், கதாப்பிரசங்கம் மூலமும் உணர்த்தினர்கள்.

அறிஞர் அண்ணு தி. மு. க.வை கட்டி எழுபபுவதற்கு நாடகக் கலையை ஒரு கருவியாகப் பயன்படுத்தினர். அதே போல் ஈழத் தமிழர்களிடையே விடுதலை உணர்ச்சியை வளர்க்க நாடகக் கலையைப் பயன்படுத்த முன்னிற்பவர்கள் குறைவு. அக்குறையை நிவர்த்தி செய்வதற்கான முதற்படியாக அமைந்ததெனலாம் இந்நாடகம். இதைப் பின்பற்றி நாடக உலகில் பிரசித்தி பெற்றோர் நாடகங்களை உருவாக்குவார்களாஞல் மேடைப்பேச்சுக்களை விட இவை மக்கள் மனதில் நன்ருகப் பதிந்து சிந்திக்கத் தூண்டும். இந்நாடகத்தில் ஒரு குறையும் உண்டு. அதாவது எம்மினத்திடையேயுள்ள சுயநலத் துரோகிகள் சிங்கள ஏகாதிபத்தியத்திற்கு துணைபோவதையும் அவர்கள் முடிவு எவ்வாறு அமையவேண்டுமென்பதையும் சேர்த்திருப்பார்களாஞல், நாடகம் முழுமைபெற்றிருக்கும். தயாரிப்பாளர்கள் தமது அடுத்த படைப்பில் இதைக் கவனத்தில் எடுத்துக்கொள்வார்களாக. எனினும் இச்சிறந்த நாடகத்தைத் தயாரித்த திரு. க. இராஜமனேகரன் திரு. வே. இளங்கோ ஆகியோர் பாராட்டுக்குரியவர்கள்.

அடுத்து மேடையேறியது 'கம்பர் கவி இன்பம்' எனும் இலக்கிய விசாரம். கம்பராமாயணத்தை தற்காலப் பிரச்சினைகளோடு ஒப்பு நோக்கி ஆய்வு நடத்தினர். தர்மத்தின் குறியீடான இராமனை அதர்மத்தின் குறியீடான இராவணன் துன்புறுத்தும்போது வானர சேனை கிளர்ந்தெழுந்து எவ்வாறு தர்மத்தை நிலைநாட்டியதோ அதுபோன்றே சுரண்டப்படும் வர்க்கமாகிய தமிழினம் கிளர்ந்தெழுந்து சுரண்டும் வர்க்கமாகிய சிங்கள இனத்தை அழிப்பது தர்மத்தின்பாற்பட்டது எனும் வகையில் இது அமைந்திருந்தது.

அதைத் தொடர்ந்து "நிர்வாண உலகில் கோவணம் கட்டியவன்" இது ஒரு அரச கதை மன்னன் மறைகின்ருன். இளவரசன் வளர்ந்து மூளைசாலியாக வரும்வரை ஆட்சிப் பொறுப்பை அரசியார் தானே எடுத்துக்கொள்கின்ருர். சுயநலம் கருதி அரசியாருக்கு ஆமாப்போடும் மந்திரிகள் இளவரசன் மூளையற்ற கோமாளி எனத் தெரிந்தும் மக்களை மடையர்களாக வைத்து அவர்கள் கண்ணில் மண்ணைத்தூவி தாம் பிடித்த முயலுக்கு மூன்று கால் என்பதுபோல அவனை மன்னனுக்க முயல்வதும் மக்கள் உண்மையை உணர்ந்து வெளிப்படுத்தும்போது ஆட்சி பலத்தைப் பாவித்து அவர்களை அழிப்பதையும் ஓர் புதிய பாணியில் சிறப்பாகச் சித்தரித்திருந்தனர். இது இன்றைய ஆட்சிக்கும் அனுராவுக்கும் கொடுத்த அடியாகும்.

கார்த்திகா ஆடற்கலையக மாணவிகளான செல்விகள் ஆனந்தராணி பாலராணி சகோதரிகளின் பரதநாட்டியம் விழாவிற்கு மேலும் மேருகூட்டிச் சிறப்பித்தது. மொத்தத்தில் இக்கலைவிழா பொருள் பொதிந்த தொன்ருகும்.

—பிற்போக்குவாதி

## ● விமர்சனம்

# புதிய காற்று

ஈழத்தில் உருவான தமிழ்ப்படம்—அதுவும் மலையகத் தமிழ்த்தோட்டத் தொழிலாளர்களின் வாழ்க்கைப் போராட்டத்தைப் பின்னணியாகக்கொண்டு உருவாக்கப்பட்ட திரைப்படம்—என்னும் காரணத்திஞல் "புதிய காற்று" திரைப்படத்தை மெத்த ஆவலோடு சென்றுபார்த்தேன்.

மலையகத் தோட்டமொன்று—அதில்வேலைசெய்யும் தொழிலாளர்களுக்கு எற்படும் தொல்லைகள்—தொழிலாளர்களுக்காகப் பரிந்துபேசி, தொழிலாளக் குடும்பத்துப் பெண் ஒருத்தியையே காதலித்துத் திருமணம் செய்யும் தோட்ட முதலாளியின் இளைய மகன்—முதலாளித்துவச்செருக்கு நிறைந்த அவனது அண்ணன்—நல்லவரான தோட்டமுதலாளி — இப்படியான பாத்திரங்களை வைத்து "புதிய காற்று" திரைப்படக் கதை பின்னப்பட்டுள்ளது.

தோட்டத்தொழிலாளர்களின் பிரச்சினை — குடியிருப்பு, வாழ்க்கை வசதிக் குறைவு ஊதியக் குறைவு இவை மட்டும்தானு? இவற்றுக்கப்பால் அவர்களது குடியுரிமை, வாக்குரிமை பறிக்கப்பட்டு அவர்கள் நாடற்றவர்களாக — நாதியற்றவர்களாக — நாடு கடத்தப் படுகிருர்களே! இந்த அடிப்படைப் பிரச்சினையைத் தொட்டுக் காட்ட "புதிய காற்று" ஏனோ பின் வாங்கி விட்டதே.

தோட்டத் தொழிலாளர்களுக்காக வாதாடும் சமதர்மவாதியாக அதாவது கதாநாயகனுக — வருகிருர் தயாரிப்பாளரான வி. பி. கணேசன்.

கணேசனின் காதலியாக நடிக்கும் பரிஞலையின் நடிப்பு இயற்கையாக இருக்கிறது. கதாநாயகி பாத்திரத்துக்கு ஏற்ற நடிகை என்ற பெருமையை இந்தப் படத்தின் மூலம் அவர் தட்டிக் கொண்டு விட்டார்.

டீன் குமாரின் நடிப்பில் தமிழகத்துப் பிரபல நடிகர் ஒருவரின் ஜாடை வீசுகிறது. அவருக்கு இணையாக வரும் சிங்கள வீணு சிறந்த 'செக்ஸ்' நடிகையாக பரிணமிக்கிருர்.

அப்பா வேடத்துக்கு இவரே தகுதியானவர் என்கிற பெயரை தனரத்தினம் இப்படத்தின் மூலம் தட்டிக் கொண்டுவிட்டார். ரொம்ப இயல்பாக அவர் நடிக்கிருர். சின்னையாவின் அப்பா நடிப்பும் வெகுஜோர்.

சிலபாடல்கள் ஜனரஞ்சகமாக இருக்கின்றன.

இந்திய தமிழ்ப் படங்களை ஆபாசப்படங்கள் என்று ஒதுக்கிவிட்டு—ஈழத்தில் உருவான இந்தப் படத்தில் இத்தனை தூரம் அருவருக்கத்தக்க ஆபாச "செக்ஸ்" காட்சிகள் அவசியம்தானு?

ஒலிப்பதிவு மோசம். உரையாடல்கள் தெளிவில்லை.

ராமநாதனின் டைரக்ஷனே படத்துக்கு உயிர் கொடுக்கிறது.

தமிழ்த்திரைப் படக்கலை ஈழத்தில் வளர்ந்து வருகிற தென்ற நம்பிக்கையை "புதிய காற்று" ஊட்டுகிறது.

மலையகத்தின் இயற்கைக் காட்சிகளை புதிய காற்றில் கண்டு இரசிக்கலாம்.

—தென்றல்

## அல்லைப்பிட்டிக் கிளை அலுவலர்கள்:

தமிழர் கூட்டணியின் அல்லைப்பிட்டிக் கிளை காவலூர் பா. உ. திரு. கா. பொ. இரத்தினம் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் நிறுவப்பட்டது. பின்வருவோர் உத்தியோகத்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர். தலைவர் பொ. நடராசா, துணைத்தலைவர் சி. கணபதிப்பிள்ளை, செயலாளர் க. கனகரத்தினம், துணைச்செயலாளர் செ. செல்வரத்தினம், பொருளாளர் க. இராசரத்தினம், இருபத்தொருபேரைக் கொண்ட செயற்குழுவும் தெரிவுசெய்யப்பட்டது.

## தமிழர் கூட்டணி மண்டைதீவுக் கிளை அலுவலர்கள்:

தலைவர் நா. தாமோதரம் பிள்ளை, செயலாளர் சி. ஜெயசிங்கம், துணைச்செயலாளர் வீ. மாணிக்கவாசகர், பொருளாளர் இ. கந்தையா பதினேழுபேரைக் கொண்ட செயற்குழுவும் தெரிவு செய்யப்பட்டது.

## ஆயுதபூசையும்...

—6-ம் பக்கத் தொடர்

தொடையில் கயிறு திரிக்க இவர்களால் முடியாது. இன்று தமிழன் விழித்துவிட்டான். இனித் தமிழன் தூங்க மாட்டான். துவழவும் மாட்டான். இன்றைய இளம் சந்ததி எம் அன்றைய வரலாறு பற்றி ஆழ்ந்து சிந்திக்கத் தலைப்பட்டு விட்டது. அதன் சிந்தனை, எம் பண்டைய பெருமை பற்றியும் இன்றைய சிறுமை பற்றியும், அது போக்கப்படவேண்டிய கடமை பற்றியும் சிறகடித்துப் பறக்க ஆரம்பித்துவிட்டது. இனி அதை எந்த சக்தியாலும் தடுக்கமுடியாது. இனி அது ஓயாது. உறங்கிச் சாயாது. இன்று அதன் காதுகளில் "வெறிநாய்கள் முன் சத்தியாக்கிரகம் செய்ய மாட்டோம்—வெறிநாய்களைக்கட்டி வையுங்கள். இன்றேல்...வீழ்த்துவோம்!" என்று அமரர் வன்னியசிங்கம் முழங்கிய முழக்கத்தின் பொருள் புரிந்து, பொப் இசையாக இனிக்கிறது:

வங்க நிகர் தங்கத் தமிழீழம் சமைக்கத் துடிக்கின்ற சிங்கத் தமிழ் வாலிப கூட்டமே! விடுதலை காண விரையும் தமிழக் குடியே! தமிழர் குலக்கொடியே!! நீதி உன் பக்கம். நியாயம் உன் பக்கம். வெற்றி...?

மறவர் படைதான்
தமிழ்ப்படை—குல
மானம் ஒன்றுதான்
அடிப்படை
வெறிகொள் தமிழர்
புலிப்படை—அவர்
வெல்வார் என்பது
வெளிப்படை

என்னும் பாடல் பதில் கூறும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமைத் தபால் நிலையத்தில் செய்திப் பத்திரிகையாகப் பதிவுசெய்யப்பட்டது.

பிளாஸா 2வது வாரம்!

★ கணேஷ், ★ பரிஞலே, ★ லினு
-நடித்த-

**புதிய காற்று**

டைரக்ஷன்: எஸ். ராமநாதன்.
தயாரிப்பு: வி. பி. கணேசன் ஜே. பி.

7வது ஜனத்திரள் வாரம் கிங்ஸ்லி
ரவிச்சந்திரன், ஜெய்சங்கர், சாவித்திரி, லட்சுமி, ஜெயசித்திரா, நாகேஷ், நடித்த—

**அக்கரை பச்சை**

விரைவில்:- தீர்க்க சுமங்கலி

10-வது வாரம் கெப்பிட்டல்
பக்திக்கும் சக்திக்கும் இடையில் நிகழும் பலப்பரீட்சை!
சிவகுமார், சுந்தரராஜன், நாகேஷ், ஸ்ரீகாந்த் சசிகுமார், ஜெயசித்ரா, ஜெயசுதா நடித்த—
தேவரின்

**வெள்ளிக்கிழமை விரதம்**

(ஈஸ்ட்மென் கலர்)

9வது வாரம்
லிடோ (யாழ்நகர்)
சிவாஜி - ஜெயலலிதா நடித்த

**தாய்**

2வது வாரம்!

**செல்லமகால்**

★ கணேஷ்,
★ பரிஞலே,
ஆகியோர் நடித்த—

**புதிய காற்று**

டைரக்ஷன்: எஸ். ராமநாதன்.
தயாரிப்பு: வி. பி. கணேசன் ஜே. பி.

இப்பொழுது காட்சிதருகிறது
ரீகல் (மட்டுநகர்)

கண்ணுல் காண்பதும்பொய்! காதால் கேட்பதும் பொய்! தீர விசாரித்தறிவதே மெய்! அவன் தான் கண்டதையும் கேட்டதையும் வைத்து நாகதம்பிரான்தான் தனதுதாயின் உயிரைப் போக்கியதாக நினைத்தான் ஆனுல் கடைசியில் உண்மையை அறிந்த போது!... விளக்க வருகிறது:

**வெள்ளிக்கிழமை விரதம்**

எம்பயர் — 9-வது வாரம்
சஷிகபூர் — மும்தாஸ்
நடித்த

**சோர் மச்சாயே சோர்**

(ஈஸ்ட்மென் கலர்)

இப்பொழுது காட்சியளிக்கிறது
கெயிட்டி
எம்.ஜி.ஆர் — டி. ஆர். ராஜகுமாரி
-நடித்த-

**குலேபகாவலி**

ரீகல் (நுவரெலியா) 3-வதுவாரம்
தினசரி 2.30, 6, 9, ஞாயிறு 10.30, 2.30, 6, 9
எம்.ஜி.ஆர். கே.ஆர்.விஜயா நடித்த-

**நல்ல நேரம்** (கலர்)

3-வது வாரம்
நெல்சன் (திருமலை)
தினசரி 6, 9.30, சனி—ஞாயிறு 2 30, 6, 9.30

**கோமாதா என் குலமாதா**

## வீறுகொண்டெழுந்தனர் சுழிபுரம் விக்டோரியா மாணவர்கள்!

—4-ம் பக்கத் தொடர்

மாணவர்கள் சென்றனர். தன்மானம் மிக்க வேங்கைகள் கூட்டம் வசிக்கின்ற சங்கானை, சண்டிலிப்பாய், மானிப்பாய், நவாலி (இராஜ்குமாரின் ஊர்) ஆனைக் கோட்டை ஊடாக பேருந்து வண்டி தலைநகரை அடைந்தது. பேருந்து நிற்பாட்டும் இடத்தடிக்குச் சென்ருல் தங்களை ஊர்வலமாக செல்ல பொலிசார் தடை செய்யலாம் என முன்கூட்டியே அறிந்த நம் இளம் சமுதாயத்தினர், வெலிங்டன் படமாளிகைச் சந்தியில் இறங்கினர் அதில் இருந்து ஊர்வலம் மீண்டும் ஆரம்பமாகி

ஒழுங்கான முறையில் பருத்தித்துறை வீதி வழியாகச் சென்று ஆஸ்பத்திரி வீதியை

அடைந்து வடமாநில கல்வி அதிபதியின் அலுவலகத்துக்குச் சென்றனர். இச்செய்தி

அறிந்த யாழ்நகர் மக்கள் பெரும் அதிர்ச்சி அடைந்தனர். இதற்கிடையில் பத்திரிகை நிருபர்களும் ஆர்வமுடன் நடந்த நிகழ்ச்சிகளை அறிந்து கொண்டனர். அதுவரைக்கும் பொலிசார் ஒரு வரும் ஊர்வலத்தை தடை செய்யவில்லை.

எம் மாணவமாணவிகளின் செயல் திறனைக்கண்ட இன்ஞெரு பகுதியினர் இச்செய்தியை தமிழர் கூட்டணியைச் சேர்ந்த திருவாளர் கதிரவேற்பிள்ளை (தே. பே. உறுப்பினர்) சட்டத்தரணி விசுவநாதன், சட்டத்தரணி யோகேஸ்வரன் ஆகியோரிடம் எடுத்துக்கூறினர் இதன் பின்னர் கல்லூரி மாணவத் தலைவர்கள் ஐவர் கொண்ட குழு ஒன்றை வித்தியாதிபதி அழைத்துப் பேச்சு வார்த்தை நடாத்திஞர். இம்மாதிரியான செயல்கள் இனி மேலும் கல்லூரியில் நடக்காமல் தான் பார்த்துக் கொள்வதாக அவர் மாணவர்களுக்கு உறுதிமொழி கூறி நல்ல கருத்துக்களையும் கூறி அனுப்பிவைத்தார்.

அவரிடம் தங்கள் நிலைமையை எடுத்துக்கூறிய மாணவ மாணவியர்கள் அடுத்த கட்டமாக வடமாநிலப் பொலிஸ் அதிபரைச் சந்திப்பதற்காக வேம்படி மகளிர் கல்லூரி வீதிவழியாகச் சென்று, பொது நூலக வீதியை அடைந்தனர். அதற்கிடையில் திரு. கதிரவேற்பிள்ளை அவர்கள் இவ் விடயம் பற்றி முதலில் பொலிஸ் அதிபரோடு உரையாடிஞர். மாணவர்களின் ஊர்வலம் பொது நூல் நிலையத்தின் முன்பாகச் செல்லும் வீதியில் வைத்து பொலிஸ் அதிகாரிகளால் தடுத்து நிறுத்தப்பட்டது. அவர்களைக் கண்டும் நம் இளைஞர் சமுதாயம் பீதியடையவில்லை.

இறுதியில் அவசரகாலச் சட்டத்தின் கீழ் ஊர்வலமாக செல்லக்கூடாது என்று கூறி ஊர்வலத்தை பொலிஸ் அதிகாரிகள் கலைந்து செல்லும்படி வேண்டுகோள் விடுத்தனர். அத்துடன் திரு. கதிரவேற்பிள்ளையின் வேண்டுகோளுக்கு இணங்க மாணவர்கள் ஐவர் கொண்ட குழு ஒன்று பொலிஸ் அதிபரைக் கண்டு தமது கல்லூரியில் எதேச்சாதிகாரமாக துப்பறியும் பிரிவினர் நடத்திய செயலைக் எடுத்துக்கூறி இனி மேலும் இப்பேர்ப்பட்ட நடவடிக்கைகள் நடக்கக் கூடாதென்றும் இதற்குத் தகுந்த நடவடிக்கை எடுக்கும்படியும் கேட்டுக் கொண்டனர்.

### வெற்றி

அப்போது பொலிஸ் அதிபர் யாவற்றையும் விபரமாகக் கேட்டறிந்தார் எனினும் இவ்விடயததில் தன்ஞல் இயன்ற நடவடிக்கை எடுப்பதாகவும் மாணவர் குழுவுக்கு உறுதி மொழி அளித்தார். பின்னர் அமைதியான முறையில் மாணவ மாணவிகள் தத்தமது இல்லத்துக்கு சென்றனர். ''தங்களின் தூய்மையான போராட்டத்தில் அவர்கள் வெற்றியும் கண்டு விட்டார்கள்'' என்று அறிந்ததும் மிக்க உற்சாகமடைந்தேன். இறும்பூது எய்தினேன். இம் மாணவ மாணவிகளின் நடவடிக்கையால் அன்று மாலை அல்பேட் ரரஜ்குமாரும் அவருடன் கைதுசெய்யப்பட்டவர்களும் விடுதலை செய்யப்பட்டனர்.

இச்செய்தி அக்கல்லூரி மாணவ மாணவிகள் மத்தியில் மட்டுமல்ல, யாழ்நகர் முழுவதிற்குமே ஒரு பேரானந்தத்தை அளித்தது. நம் இளைஞர் சமுதாயத்தினர் செய்த துணிகரமான இச் செயலையும் அவர்கள் பெற்றுக்கொண்ட வெற்றியையும்போற்ருதார் உண்டோ?

—தங்கநகர் தம்பி

**சனி பகவான் தோத்திரம்**

15 மில்க்வைற் நீல சோப் அல்லது 2 பார் சோப், அல்லது 2நீம் சோப் மேலுறைகளை அனுப்பி மேற்படி புத்தகத்தைப் பெற்றுக்கொள்ளவும்.

மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகம்.
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை இலோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட் [illegible] கொழும்பு-12 பண்டாரநாயகா வீதி, 194 ஏ, இலக்கத்தில் 1975-ம் வருடம் ஒக்டோபர் மாதம் 12-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டுள்ளது.